SEPTEMBER 08, 2020
TUESDAY
VOL: 006/090
RS. 10.00
LATE CITY★

விலை Rs.10

Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror



# 20ஐ எதிர்க்கிறது சஜித் அணி

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் அதனைத் தோற்கடிக்கவும், நிபந்தனையின்றி நடவடிக்கை எடுக்க, ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

மேற்படி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில், நேற்று (07) இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை எதிர்ப்பது தொடர்பான யோசனையொன்றை, அக்கட்சியின் எம்.பி புத்திக தொடர்ச்சி P2

# ‘பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த நாடு’

## பிரதமர் மஹிந்த புகழாரம்; சந்திரசிறி உதாரண புருஷர் என்கிறார்



மனித உரிமைகளைப் பாதுகாத்து, உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த நாடு என்ற வகையில் இலங்கைக்கு உலக மத்தியில் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததெனத் தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதற்கு முன்னாள் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் தலைமை முக்கியமானதாக அமைந்தது என்றார்.

“எவ்வித சிக்கல்களும் இன்றி பயங்கரவாதிகளைப் புனர்வாழ்வளித்து, மீண்டும் சமூகத்துடன் இணைப்பதற்கு முடிந்தது. அதற்கு அவரின், அரசியல் அறிவு மற்றும் நற்பண்பு என்பன முக்கியமானதாய் அமைந்திருந்தன” என்றார்.

முன்னாள் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் ஆண்டு நினைவு விழா, மாத்தறை உயன்வத்த எச்.கே.தர்மதாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

‘யுத்தம் நிறைவடையும் காலத்தின்போது சந்திரசிறி கஜதீர, தொடர்ச்சி P2

# ‘போல்ரூம்’ தடை



இலங்கை போல்ரூம் நடன கலைஞர்கள் அமைப்பின் பதிவை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இரத்துச் செய்துள்ளார்.

ஒகஸ்ட் 31ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட அதற்கான வர்த்தமானி அறிவித்தல், செப்டெம்பர் 4ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



# ‘சொக்கா மல்லி இன்று சத்தியப்பிரமாணம்’

## மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால கட்டளை

கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான மரண தண்டனை விதிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பிரேமலால் ஜயசேகர, தொடர்ச்சி P2

# ‘நன்மை செய்யுங்கள் நாங்கள் தடையாக இருக்கமாட்டோம்’

## சுமந்திரன் தெரிவிப்பு



■ செந்தூரன் பிரதீபன்

அடையாளத்தை விற்று நாங்கள் பிழைப்பு நடத்தமாட்டோம் என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மக்களுக்கு நன்மை செய்யுங்கள்; நாங்கள் தடையாக இருக்கமாட்டோமென, ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொண்டார். தொடர்ச்சி P2

# ‘ஆணைக்குழுக்கள் அல்ல மக்கள் பாதுகாப்பு முக்கியம்’

## நீதியமைச்சர் தெரிவிப்பு: ஒரு பஸ்ஸுக்கு இரண்டு சாரதிகளால் பிரச்சினை என்கிறார்



சுயாதீன ஆணைக்குழுகளால் கடந்த சில வருடங்களாக நாட்டுக்குள் குழப்பகரமான நிலைமையொன்று உருவாகியிருந்தது எனத் தெரிவித்த நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஆணைக்குழுக்கள் அல்ல, மக்களின் பாதுகாப்பே முக்கியமானது என்றார். தொடர்ச்சி P2

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபரொருவர் உயிரிழந்தார்

## பூதவுடல் நுரளையில் தகனம்

■ டி.ஷங்கீதன்

நுவரெலியா நகரத்திலுள்ள சுற்றுலா ஹோட்டலொன்றில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த, கொழும்பைச் சேர்ந்த சுப்ரமணியம் ஆனந்தகுமார் (வயது 56), ஞாயிற்றுக்கிழமை (06) மாலை மரணமடைந்தார். தொடர்ச்சி P2



# இரத்தினக்கல், தங்க ஆபரணக் கைத்தொழில் மீதான வரி நீக்கம்



இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலாளர்கள் ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த 14 சதவீத வருமான வரி மற்றும் 15 சதவீத தங்க இறக்குமதி வரிகளை நீக்குவதற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

1971ஆம் ஆண்டு முதல், தங்கம் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு தொடர்ச்சி P2



## 21/4 தாக்குதல்;

# ஹிஸ்புல்லாஹ், முஜிபுர் இருவரும் சாட்சியம்

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எஸ்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் ஆகிய இருவரும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில், முதன்முறையாக ஆஜராகி, நேற்று (07) வாக்குமூலமளித்தனர். தொடர்ச்சி P2

## மீண்டும்

# பற்றி எரிகிறது நியூ டயமன்ட்



எம்.டி நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்டிருந்த தீ, முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்த நிலையில், நேற்று (07) மாலை, மீண்டும் அந்தக் கப்பலில் தீப் பரவல் ஆரம்பித்துள்ளது. தொடர்ச்சி P2

# ‘20, பசிலுக்கானது அல்ல; 7 குழுக்கள் உள்ளன’

## கல்வியமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு: மூன்றிலிரண்டு கிடைக்கும் என்கிறார்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவுக்காக, 20ஆவது திருத்தம் கொண்டுவரப்படவில்லை எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எந்தவொரு சுயாதீன ஆணைக்குழுக்களும் 20ஆவது திருத்தத்தின் ஊடாக நீக்கப்படவில்லை என்றார். தொடர்ச்சி P2

# ‘அழைப்பில்லை; அழைத்தாலும் நான் பங்கேற்கமாட்டேன்’

■ நிரோஷினி விஜயராஜ்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டம், நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளமை தொடர்பில் தனக்கு அறிவிக்கவில்லையெனத் தெரிவித்த புளொட் தலைவர் தொடர்ச்சி P2

# ரணிலுக்கு அழைப்பு



ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோருக்கு அரசியல் பழிவாங்கல் தொடர்பில் தேடியறியும் ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

செப்டெம்பர் 19ஆம் திகதியன்று ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டு, அதற்கான நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ரணிலுடன் ரவூப் ஹக்கீம், சரத் பொன்சேகா, இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோருக்கும் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதத்துடன் தொடர்புடையோருக்கு தங்காலை பழைய சிறை

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களைத் தடுத்து வைப்பதற்குரிய நிலையமாக தங்காலை பழைய சிறைச்சாலை பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவின் கையொப்பத்தில், இந்த வர்த்தமானி அறிவித்தல், செப்டெம்பர் 4ஆம்



திகதியன்று வெளியிடப்பட்டது. 1982 ஆண்டு இலக்கம் 10 இன் கீழான பயங்கரவாதத்தைத் தடுக்கும் (தற்காலிக விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) தொடர்ச்சி P2

# மீண்டார் எஸ்.பி.பீ



தென்னிந்திய பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், கொரோனா நோய்த் தொற்று பாதிப்பில் இருந்து மீண்டுள்ளார்.

சென்னை, அமைந்தகரையில் உள்ள MGM மருத்துவமனையில், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில், வைரஸ் தொற்றிலிருந்து மீண்டுள்ள தனது தந்தைக்கு, செயற்கை சுவாசக் கருவி அகற்றப்பட்டுள்ளதாக, தொடர்ச்சி P2

## ஐக்கிய தேசிய கட்சி

# ‘எம்முடன் இணைய வேண்டும்’



ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் பலமுள்ள கட்சியாகச் செயற்பட வேண்டுமாயின், அக்கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய வேண்டுமெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, “அரசாங்கத்துக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து செயற்படும் காலம் கனிந்துள்ளது. ஆகையால், ஐக்கிய தேசிய கட்சியை சஜித்திடம் ஒப்படையுங்கள்” எனக் கோரிக்கை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 20ஐ எதிர்க்கிறது சஜித் அணி

பதிரன முன்வைத்துள்ளார். இதனை, குருநாகல் மாவட்ட எம்.பி அசோக் அபேசிங்க வழிமொழிந்துள்ளார். அத்துடன், 19ஆவது திருத்தத்தில் உள்ள ஜனநாயகக் கோட்பாடுகளை மேலும் வலுப்படுத்தி, அவற்றை முன்னோக்கிக் கொண்டுசெல்வதே, கட்சியின் நிலைப்பாடு என்றும், அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கியமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவும், அக்கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 'போல்ரூம்' தடை

விளையாட்டுத்துறை அமைச்சர் என்றவகையில், விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், போல்ரூம் டான்ஸ் விளையாட்டு தொடர்பான தேசிய சம்மேளனமான இலங்கை போல்ரூம் டான்ஸ் சம்மேளனத்தின் பதிவு, உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# 'பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த நாடு'



சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக சேவையாற்றினார். இந்நாட்டின், தமிழீழ விடுலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் சுமார் 13 ஆயிரம் புனர்வாழ்வு பெறுவதற்காக அவரிடம் சரணடைந்தனர். இது மிகவும் பொறுப்பான முறையில் மேற்கொள்ள வேண்டிய கடமையாக இருந்தது" என்றார்.

அரசியல் புலமை பற்றி நம் நாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் பேசுகிறார்கள். இருப்பினும், சந்திரசிரி கஜதீர நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இருந்து இந்நாட்டின் புலமைவாய்ந்த அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார் என்றார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்திருந்தோம் என நினைவுகூர்ந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அந்த தேசிய அரசாங்கத்தின் உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சராக சந்திரசிறி கஜதீர பணியாற்றினார். அவரது அமைச்சராக ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வந்து எம்முடன் இணைந்திருந்த உறுப்பினர் இருந்தார்.

அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் இடையே எப்போதும் ஒரு சிறிய பனிப்போர் காணப்படும். அமைச்சர் ஒரு கட்சியை சேர்ந்தவராகவும், பிரதியமைச்சர் மற்றொரு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும் காணப்படின் அப்போர் மேலும் தீவிரமடையும். இருப்பினும், சந்திரசிறி கஜதீர ஒரு முதிர்ச்சி மிகுந்த மற்றும் அரசியல் ரீதியாக சிந்திக்கக்கூடியவர் என்ற நபராகவும் விளங்கியதால் தனது அமைச்சருடன் எந்த மோதலும் இல்லாமல் மிகச் சிறப்பாக பணியாற்றியது மட்டுமல்லாமல் அவரது அமைச்சரால் பாராட்டப்பட்டார். கஜதீரவின் உன்னத தன்மை காரணமாக அவ்வாறு செய்ய முடிந்தது என்றார்.

# 'சொக்கா மல்லி இன்று சத்தியப்பிரமாணம்'



நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கான அனுமதியை வழங்குமாறு, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (07) இடைக்கால கட்டளையை பிறப்பித்தது.

நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்குவதா, இல்லையா என்பது தொடர்பில், கட்டளையை பிறப்பித்தே, மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கண்டவாறு கட்டளையிட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் தெரிவான தன்னை, நாடாளுமன்ற அமர்வுகள், கூட்டங்களில் பங்கேற்பதற்கு அனுமதியளிக்குமாறு, சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு கட்டளையைப் பிறப்பிக்குமாறறு கோரி, மரண தண்டனைக் கைதியான, பிரேமலால் ஜயசேகர, ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு, மேன்முறையீட்டு நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸ் (தலைவர்), நீதியரசர் யோஹித ராஜகருணா ஆகியோரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் நேற்று (07) ஆராயப்பட்டது.

"நாடாளுமன்றத்துக்கு உறுப்பினராகத் தெரிவான பிரேமலால் ஜயசேகர, தெரிவாகியிருப்பது சட்டவிரோதமானது அல்லவென நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, அறிவிப்பெதுவும் இதுவரையிலும் விடுவிக்கப்படவில்லை" என நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸ், திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம், மனுதாரருக்கு நாடாளுமன்றத்தில் கிடைக்கவேண்டிய அனைத்து உரிமைகளையும் ஒரே மாதிரியாக அனுபவிப்பதற்கு சட்டரீதியில் எவ்விதமான இடையூறு இல்லையென அறிவித்த நீதியரசர் ஏ.எச்.எம்.டீ.நவாஸ், ஆகையால், உறுப்பினராக அவர் பதவிப்பிரமாணம் செய்வதற்கு சட்டரீதியில் எவ்விதமான இடைஞ்சல்களும் இருப்பதாகத் தெரியவில்லை என்றார்.

ஆகையால், மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு அனுமதியளிப்பதாகவும் அதன் பிரதிவாதிகளான சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, வெலிக்கடை சிறைச்சாலை கண்காணிப்பாளர் மற்றும் நாடாளுமன்ற பொதுச் செயலாளர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பிவைக்குமாறு கட்டளையிட்ட நீதிமன்றம், மனுவை இம்மாதம் 29ஆம் திகதி அழைப்பதற்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

அதேபோல, பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை எதிர்வரும் 29ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, அந்த நோட்டீஸில் குறிப்பிடுமாறு, நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, "மனுதாரரான நாடாளுமன்ற உறுப்பினர், தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஆவார். அவ்வாறான கைதியொருவர், நாடாளுமன்றத்துக்குச் செல்வதில் சட்டரீதியிலான ஏற்பாடுகள் எவையும் அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை என்றார்.

மனிதப் படுகொலைக் குற்றச்சாட்டில் குற்றச்சாட்டப்பட்ட தனக்கு, இரத்தினபுரி மேல்நீதிமன்றத்தின் ஊடாக மரணதண்டனை விதிக்கப்பட்டது. அந்த தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தான், மேன்முறையீடு செய்துள்ளேன் என, மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# 'நன்மை செய்யுங்கள் நாங்கள் தடையாக இருக்கமாட்டோம்'

அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், சிவனேசதுரை சந்திரகாந்தன் எம்.பி, ஆகியோர், எங்களுடைய இனத்தை அளிக்கின்ற எல்லா செயற்பாடுகளுக்கும் எதிர்த்து நிற்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள அவர், எங்களுடைய தேசிய இனத்தின் எதிர்ப்பை இல்லாமற் பண்ணுவதற்கு உங்களையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். என்றார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (06) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

"20ஆவது திருத்தத்திலிருக்கும் ஷரத்துக்கள் பலவற்றை, பௌத்த பிக்குகளே இன்று எதிர்த்துள்ளனர். அராஜகத்துக்கு வழிவகுக்குமென அறிக்கைகள் விட்டுள்ளனர். தென்னிலங்கையிலே முற்போக்கு சக்திகள் இவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளன. இந்த நாட்டிலேயே ஜனநாயகம் தழைக்க வேண்டுமாயின், எங்களுடைய இருப்புத் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார்.

# தனிமைப்படுத்தலில் இருந்த நபர் மரணம்

அன்னாரது பூதவுடல், கொரோனா சுகாதார வழிகாட்டலுக்கு அமைய, உறவினர்களிடம் கையளிக்காமல், நுவரெலியா மாநகர சபை பொது மயானத்தில் அன்றையதினமே தகனம் செய்யப்பட்டது.

# இரத்தினக்கல், தங்க...

வழங்கப்பட்டிருந்த வரிச் சலுகை, 2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரிக் கொள்கையில் நீக்கப்பட்டது. தங்கம் மற்றும் ஆபரண ஏற்றுமதியில் ஈட்டப்படும் உண்மையான வருமானம், இதன் மூலம் வெளிக்கொணரப்படாத நிலை தோன்றியது. 2018ஆம் ஆண்டு தங்க இறக்குமதிக்கு, 15 சதவீத வரி விதிக்கப்பட்டது. தங்க நகைகளின் விலை உயர்வடைவதற்கு, இவ்வரி காரணமாக அமைந்தது. குறித்த வரியை உடனடியாக நீக்கி, கைத்தொழிலின் மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அத்துடன், தங்க நகை உற்பத்தியாளர்களுக்கு, தங்கத்தைக் கொள்வனவு செய்வதற்காக அரச வங்கிகளினால் 4 சதவீத சலுகை வட்டி அடிப்படையில், 10 இலட்சம் ரூபாய் கடன் வழங்குமாறும், அரச வங்கிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

# 'ஆணைக்குழுக்கள் அல்ல மக்கள் பாதுகாப்பு முக்கியம்'

களுத்துறையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

"19ஆவது திருத்த சட்டத்துக்கு என்ன நடக்கும், 20ஆவது திருத்தத்தின் ஊடாக என்ன நடக்கவிருக்கிறதென ஊடகங்கள் கேள்வி கேட்கின்றன. வேலைச் செய்வோரே இந்த அரசாங்கத்தில் இருக்கின்றோம். திருத்தங்களை மேற்கொண்டு, புதிய, புதிய புத்தகங்களை எழுதுவதற்கு நாங்கள் வரவில்லை" என்றார்.

"19ஆவது திருத்தத்தை தூக்கிக்கொண்டு வந்துள்ளனர். நாங்கள் அவற்றை நீக்குவோம். கடமைகளை செய்துகொள்ளும் வகையிலான சுற்றாடலை ஜனாதிபதிக்கு ஏற்படுத்திக்கொடுப்போம்" என்றார்.

"19ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரத்தை கொடுத்தோம். அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்டவை எவை? குற்றச்செயல்கள் குறைக்கப்படுமென எதிர்பார்த்தனர். எனினும், ஆணைக்குழுவின் ஊடாக குற்றச்செயல்கள் குறைந்துள்ளனவா? எனக்கு கீழே, அரச பகுப்பாய்வு திணைக்களம் உள்ளது" என்றார்.

"நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடினோம், போதைப்பொருள் பாவனை தொடர்பில் பரிசோதனைகள் 2015ஆம் ஆண்டு 6,700ஆக இருந்தது. 2016இல் 7,900ஆக அதிகரித்தது. 2018 இல் 11,000 ஆக இருந்தது. கடந்த வருடம் 16,000 ஆக அதிகரித்து இவ்வருடம் இதுவரையிலான காலப்பகுதிக்குள் 14ஆயிரம் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

# 'அழைப்பில்லை; அழைத்தாலும் நான் பங்கேற்க மாட்டேன்'

தர்மலிங்கம் சித்தார்த்தன், அவ்வாறு அறிவிப்புக் கிடைத்தாலும், தன்னால் அன்றைய தினக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதெனவும் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டம், நாளை (09) புதன்கிழமை கொழும்பில் கூடவுள்ளது.

இதன்போது, நாடாளுமன்றக் குழுவின் தலைவர், பேச்சாளர், கொறடா ஆகிய பதவிகளுக்கான தெரிவு, 20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்புப் கடைப்பிடிக்க வேண்டியவை, உள்ளிட்ட விவகாரங்கள் கலந்துரையாடப்படவிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் வினவிய போது, அறிவித்தல் கிடைக்குமிடத்து, பிறிதொரு தினத்தில் கூட்டத்தை நடத்துமாறு கோரிக்கை விடுப்பேன் எனக் கூறினார்.

# பற்றி எரிகிறது நியூ டயமண்ட்

ஆழ்கடலில் வீசி வரும் கடும் காற்று காரணமாகவே, மீண்டும் இந்தத் தீப் பரவல் ஆரம்பித்துள்ளதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

இதனால், கப்பலின் தீப்பரவலைக் கட்டுப்படுத்த, ஏற்கெனவே பயன்படுத்திய DCP எனும் இரசாயனத்தை, ஹெலிகள் மூலம் கொண்டுசென்று, தீப்பர வலைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

# ஹிஸ்புல்லாஹ், முஜிபுர் இருவரும் சாட்சியம்

ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே இவ்விருவரும் வாக்குமூலம் அளித்துள்ளனர். காலை 9.15 மணியளவில் ஆணைக்குழுவுக்குள் நுழைந்த அவ்விருவரும், மாலை 5.30 மணிவரையிலும் அங்கிருந்து வெளியேறவில்லை.

இதேவேளை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அறுவர், நேற்றையதினம் சாட்சியளிப்பதற்கு இருந்தனர் எனத் தெரிவித்த ஆணைக்குழுவின் அதிகாரி, பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் ஆணைக்குழுவுக்கு சமூகமளித்திருந்தனர் என்றார்.

# '20, பசிலுக்கானது அல்ல; ஏழு குழுக்கள் உள்ளன'

20ஆவது திருத்தம் தொடர்பில் ஏற்படும் எந்தவொரு சட்டரீதியான சவால்களுக்கும் முகங்கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த அவர் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவோம் என்றார்.

பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று (07) நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ, 2019 நவம்பர் மாதம் ஜனாதிபதியாக பதவியேற்றார். 19ஆவது திருத்தச்சட்டம் இல்லை என்றால், அவர் உடனடியாகப் நாடாளுமன்றத்தைக் கலைத்திருப்பார். இதனால் கடந்த 10 மாதங்கள் ஜனாதிபதியால் எதனையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

20ஆவது திருத்தத்தின் ஊடாக, ஆணைக்குழுக்கள் நீக்கப்பட்டதெனக் கூறுவது அப்பட்டமான பொய் எனக்கூறிய அவர், 20ஆவது திருத்தத்தின் ஊடாக 7 ஆணைக்குழுக்கள் உள்ளன என்றார்.

# மீண்டார் எஸ்.பி.பீ

எஸ்.பி.பீயின் மகன் எஸ்.பி.பீ.சரண், சமூக ஊடகத்தில், காணொளி ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், எதிர்பார்த்த அளவுக்கு, எஸ்.பி. பாலசுப்பிரமணியம் இன்னும் குணமாகவில்லை எனவும், சரண் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு கொரோனா தொற்று இல்லை என, பரிசோதனை முடிவுகள் வந்தபோதும் அவருக்கு நுரையீரலில் ஏற்பட்டுள்ள தொற்று சரியாகவில்லை என்றும், மகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எஸ்.பி.பி., கிரிக்கெட் மற்றும் டென்னிஸ் விளையாட்டுக்களை விரும்பி பார்த்து வருவதாகவும், தான் சொல்லவருவதை எழுதிக் காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ள சரண், எவ்வாறாயினும், மருத்துவர்களின் முழுக் கண்காணிப்பில், தனது தந்தக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# 'எம்முடன் இணைய வேண்டும்'

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

"74 வருடங்களின் பின்பு, வரலாற்றில் முதற்தடவையாக ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. அவ்வாறான நிலையில் கொண்டாடும் ஆண்டு நிறைவு விழாவை நாம் பார்த்தோம். தலைமையகத்தில் செப்டெம்பர் 6ஆம் திகதி நடைபெற்ற விழாவில் 24 உறுப்பினர்களே கலந்துகொண்டுள்ளனர்" என்றார்.

"74ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் ஐக்கிய தேசிய கட்சி இவ்வாறானதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமைக்கான காரணம் என்னவென்று, நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளனர் எனத் தெரிவித்த அவர், மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாற முற்படாமையே இதற்குக் காரணமாகும்" என்றார்.

"மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய, கட்சிக்குள் மாற்றத்தை ஏற்படுத்தி, உரிய நேரத்தில் உரிய முடிவுகளை எடுத்திருந்தால், ஐக்கிய தேசிய கட்சிக்கு இவ்வாறானதொரு தலையெழுத்து ஏற்பட்டிருக்காது எனத் தெரிவித்த அவர், அக்கட்சிக்கு, இதுவரையிலும் ஏழு பேர், தலைமை தாங்கியுள்ளனர்.

"24 வருடங்கள் கட்சியைத் தொடர்ந்து வழிநடத்தி, அவ்வப்போது சில வெற்றிகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொடுத்திருந்தாலும், நாட்டில் நிலையான அரசியலைக் கட்டியெழுப்ப தற்போதைய தலைவர் ரணிலுக்கு முடியாமல் போய்விட்டதென்பது எல்லோருக்கும் தெரியும்.

"ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரின் பதவியிலிருந்து 2014ஆம் ஆண்டு தான் விலகியபோது, கட்சியைப் பலப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து எடுத்துரைத்திருந்தேன். ஆனால், எதையும் கவனத்தில் எடுக்கவில்லை என்றார்.

# பயங்கரவாதத்துடன் தொடர்புடையோருக்கு தங்காலை பழைய சிறை

சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1979 ஆண்டு இலக்கம் 48இன் கீழ் பயங்கரவாதத்தைத் தடுக்கும் (தற்காலிக) ஒழுங்கு விதிகள் சட்டத்தின் 15ஆவது சரத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே, இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பணிகளுக்காக - தங்காலை பழைய சிறைச்சாலையை பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களைத் தடுத்து வைக்கும் இடமாக ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமையவே, இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.



சொகுசு பஸ் குடைசாய்ந்து விபத்து;

# ஐவர் வைத்தியசாலையில்

ஜீட் சமந்த

தனியார் பஸ் ஒன்று, கெப் வாகனமொன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில், ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, சாலியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம்- அநுராதபுரம் வீதியின், சாலியவெவ பகுதியில், நேற்று முன்தினம் (06) இரவு இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி, அதிக வேகத்தில் பயணித்த சொகுசு பஸ் ஒன்று, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் வாகனத்தை மோதித் தள்ளி, குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக, சாலியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது, பஸ்ஸில் 23 பேர் பயணித்துள்ளனர் எனினும், ஐவர் மாத்திரமே காயமடைந்துள்ளனரென, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த ஐவரும், நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால், மேலதிக சிகிச்சைக்காக, அவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக மழை பெய்தமையால், சாரதியால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதையடுத்தே, இந்த விபத்து சம்பவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை சாலியவெவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பில் வாகன நெரிசலை

# ‘கட்டுப்படுத்த ஆலோசனை’



கொழும்பு நகருக்குள் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென, கிராமப்புற வீதிகள் , பிற உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்புக்குள் ஏற்படும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா - இம்புல்கொட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்துள்ள இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, புகையிரதக் கடவைகள் அமைந்துள்ள பகுதிகளான, கொழும்பு பாலதக்ஷ மாவத்தை, அக்பர் மாவத்தை , உத்தரானந்த மாவத்தை ஆகிய பகுதிகளில் மேம்பாலங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், களனி பாலத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் இராஜகிரிய வரை, அதிவேகமாகச் செல்லக்கூடிய வீதிக்கட்டமைப்பொன்று அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள அவர், வர்த்தக நகரமான கொழும்புக்கு வருகைதரும் பொது மக்கள், எதிர்கொள்ளும் போக்குவரத்து நெரிசலைத் தணிப்பதே, அரசாங்கத்தின் நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை, குருநாகல் தொடக்கம் தம்புளை வரையான அதிவேக நெடுஞ்சாலை ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளை, 2024 ஆம் ஆண்டுக்குள் நிறைவுசெய்ய, நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அடுத்த நான்கு ஆண்டுகளில், பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகள் உள்ளிட்ட அனைத்து வீதிகளும் செப்பனிடப்பட்டு அபிவிருத்திச் செய்யப்படும் என்றும், நிமல் லன்சா மேலும் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தை

# ‘19ஆவது திருத்தமே வீட்டுக்கு அனுப்பியது’



நல்லாட்சி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமே, நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பியதாக, அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகியோரின் உதவியுடனேயே நல்லாட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதெனவும் அரசாங்கத்தை ஸ்தாபிக்க உதவியவர்களுக்கே, கடந்த அரசாங்கம் எதிர்க்கட்சிப் பதவியை வழங்கியிருந்தது எனவும் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவியையும் கடந்த அரசாங்கம் வழங்கியிருந்தது என, அவர் தெரிவித்தார்.

அத்துடன், 19ஆவது திருத்தச் சட்டத்தில் என்ன உள்ளது, அதனை யார் கொண்டுவந்தார்கள் என்பது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே தெரியாதென அவர் கூறியிருப்பதாகக் கூறிய அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, நல்லாட்சி அரசாங்கத்தை, அந்த அரசாங்கம் கொண்டுவந்த 19ஆவது திருத்தச் சட்டமே வீட்டுக்கு அனுப்பியதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, எந்தவோர் அரசாங்கத்துக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காத வகையிலேயே அரசமைப்பை உருவாக்கினார். ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, 2/3 பெரும்பான்மையை மக்கள் வழங்கியுள்ளனர் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

ரூ.8 மில்லியன் பெறுமதியான

# போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் கைது

8 மில்லியனுக்கு அதிக பெறுமதியுடைய ஹெரோய்ன் போதைப்பொருளை, ஒட்டோ ஒன்றின் மூலம் கொண்டுசென்ற இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூவரை, பொரலஸ்கமுவ-அபயரத்ன மாவத்தை பகுதியில் வைத்து, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், நேற்று (07) கைதுசெய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து, 60 கிராமும் 350 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோய்னும் வைத்தியசாலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஒட்டோ ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

> **பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, ஹொரணை– கொழும்பு பிரதான வீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்**

பிலியந்தல-போகுந்தர பிரதேசத்திலிருந்து, கல்கிஸை-படோவிட்ட பிரதேசத்துக்கு ஹெரோய்ன் கொண்டுச்செல்லப்படுவதாக, பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, ஹொரணை- கொழும்பு பிரதான வீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை-படோவிட பிரதேசத்தைச் சேர்ந்த, 32-36 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை, கங்கொடவில நீதிமன்றில் ஆஜர்படுத்த, பொரலஸ்கமுவ பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல்;

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் 3 மாதங்கள் நீடிப்பு



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லையை, மேலும் மூன்று மாதங்கள் வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழுவின் காலம், இம்மாதம் 22 ஆம் திகதி நிறைவடையவிருந்த நிலையில், டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை கால நீட்டிப்பு செய்யுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் காலம், கடந்த மார்ச் மாதத்தில் நிறைவடையவிருந்த நிலையில், புதிய ஜனாதிபதியாக தெரிவான கோட்டாபய ராஜபக்ஷ, அதன் காலத்தை, மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவை

# அதிகரிக்க விரைவில் நடவடிக்கை

## சகலருக்கும் உளவியல் பயிற்சி



முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவுள்ளதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகளுக்கு, உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கான கருவிகளை வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (06) நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்துள்ள அவர், முன்பள்ளி விடயதானத்தை உள்ளடக்கிய இராஜாங்க அமைச்சானது, இம்முறையே முதல் தடவையாக உருவாக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் , சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் என்பன, நாட்டின் எதிர்காலத்துக்கு முக்கியமானவைகளாக விளங்குகின்றன. ஆகவேதான், முன்பள்ளிகளைக் கட்டியெழுப்புவது தொடர்பில், அரசாங்கம் இம்முறை கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

சகல கிராம சேவகர் பிரிவுகளிலும், தரமான முன்பள்ளிகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்த்துள்ளதாக, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின், ‘நாட்டைக் கட்டியெழுப்பும் சௌபாக்கியத்தின் நோக்கு’ என்ற கொள்கைத் திட்டத்தின் ஓர் அம்சமாக மேற்படி வேலைத்திட்டம் அமைந்துள்ளது.

அத்துடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உளவியல் சார்ந்த கற்கையுடன் கூடிய பயிற்சிகளை அரசாங்கத்தால் வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், பயிற்சியின் பின்னர் சகல ஆசிரியர்களுக்கும் நிலையான சம்பளத் திட்டத்தை அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# ‘பிரிந்து நிற்காது ஓரணியில் திரளவும்’



எஸ்.நிதர்ஷன்

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டுமெனத் தெரிவித்த டெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், இனியும் வீடு, மீன், சைக்கிள் எனப் பிரிந்து நிற்காது, ஓரணியில் திரள்வது காலத்தின் கட்டாயமெனக் கூறினார்.

“இந்த நெருக்கடியான நேரத்தில், நாம் ஒன்றிணையாவிட்டால், தந்தை செல்வா சொன்னது போன்ற நிலைமையே ஏற்படும்” என்றும் அவர் எச்சரித்தார்.

டெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரவேற்பும் கௌரவிப்பு நிகழ்வும், யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில், நேற்று முன்தினம் (06) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத அலையொன்று, தென்னிலங்கையில் கிளப்பப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அதன் தொடர்ச்சியாக, தமிழர்களை வந்தேறு குடிகள் என்றும் வாடகை வீட்டுக்காரர்கள் என்றும் சிலர் இனவாத ரீதியான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனரெனவும் சாடினார்.

“சிங்கள தேசத்தில், தமிழர்களுக்கு எதிராக ஒன்று திரண்டு, ஒற்றுமையாக எதிர்ப்பதைப் போன்று, தமிழர் தேசத்தில் அந்த ஒற்றுமை இல்லை. தமிழர் தரப்புக்களிடத்தே, அந்த ஒற்றுமை என்பது காணல் நீராகவே உள்ளது. ஆக, தமிழ் தேசம் எங்கே போகின்றது என்ற கேள்வி எழுகின்றது” எனவும், அவர் கூறினார்.

20ஆவது திருத்தத்தை

# கூட்டணி எதிர்க்கும்?

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக, தமிழ் முற்போக்குக் கூட்டணி வாக்களிக்குமென, அக்கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு, புதிய அரசாங்கம் 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவர உள்ளது. இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும், இம்மாதம் 2ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்ததோடு, 20ஆவது திருத்தம் ஒக்டோபர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமெனவும், ஆளுங்கட்சியினர் அறிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் 6 உறுப்பினர்களும் வாக்களித்துவிட்டு, அரசாங்கத்தோடு இணைவார்களென ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் 20ஆவது திருத்தத்துக்கு எதிராகவே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பார்களென அக்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் மாகாணசபைத் தேர்தல் நிறைவடையும் வரையில் அரசாங்கத்தை ஆதரிக்கும் எந்தவொரு நகர்வுகளிலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஈடுபடாதெனவும்



அறிய முடிகிறது. அரசாங்கம் கொண்டுவரும் புதிய அரசமைப்புக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கும் பட்சத்தில், புதிய அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்வதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உதவியைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இதுத் தொடர்பானப் பேச்சுவார்த்தைகளும் திரைமறைவில் இடம்பெற்றுள்ளதாகவும் புதிய அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும் பட்சத்தில் கூட்டணிக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதுத் தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர்களும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுமான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் ஆகியோரை தொடர்புகொள்ள முயற்சித்தப்போதிலும் முயற்சி பலனளிக்கவில்லை.

## சீரற்ற வானிலையால் இயல்புநிலை பாதிப்பு

எஸ்.கணேசன், எம்.கிருஸ்ணா, எஸ்.சதீஸ், செ.தி.பெருமாள்,

மலையகத்தில் நீடித்துவரும் சீரற்ற வானிலையால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடும் காற்றுடன் கூடிய அடை மழையால், ஹட்டன் - டிக்கோயா, மெனிக்வத்த 2ஆம் பிரிவில், நேற்று முன்தினம் 11 மணியளவில் பாரிய மரமொன்று மின் கம்பங்கள் மீது முறிந்து வீழ்ந்ததால், அப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் 105 குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்படித் தோட்டத்தில், மின்கம்பங்கள் உடைந்துவிழும் அபாயம் இருப்பதால் ‘கொங்ரீட்’ தூண்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, தோட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அனைத்துத்



தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இதேவேளை, ஹட்டன் மெனிடின் அவின்யூ மாவத்தையில் பாதுகாப்பு மதில் ஒன்று சரிந்து விழுந்ததில், குடியிருப்பு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தால் குடியிருப்பின் சமயலறைப் பகுதியே சேதமடைந்துள்ளதாக, ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



மேலும் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில், நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் அடை மழை காரணமாக, மஸ்கெலிய - நோட்டன், நோட்டன் - தியகல. தியாகல - கினிகத்தேன, கினிகத்தேன - ஹட்டன் ஆகிய வீதிகளில், பனிமூட்டம் அதிகரித்துக் காணப்படுவதால், மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு, வாகன சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடும் மழையால், மஹாவலி கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால், பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள், நானகு அடி வரை திறக்கப்பட்டுள்ள என்று, மஹாவலி அதிகார சபையின் பொல்கொல்ல நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியிலாளர் காரியாலயம் அறிவித்துள்ளது.

மஹாவலி கங்கையின் நீர்மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இரு வான்கதவுகள் நான்கு அடிவீதம் திறக்கப்பட்டுள்ளன என்றும் அதனூடாக, ஒரு ஒரு விநாடிக்கு 2,100 கன அடி நீர் வெளியாவதாகவும் காரியாலயம் தெரிவித்துள்ளது.

## தனிமைப்படுத்தலில் 6,000 பேர்

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில், 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதாக, கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மய்யம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 63 தனிமைப்படுத்தல் நிலையங்களிலும், 6 ஆயிரத்து 610 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர் என்றும் 38 ஆயிரத்து 359 பேர், தற்போது வரையில் தனிமைப்படுத்தல் மய்யங்களிலிருந்து தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும், மேற்படி செயற்பாட்டு மய்யம் தெரிவித்துள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு மய்யத்தில், தற்போது வெறும் 14 பேரே சிகிச்சைப் பெற்று வருவதாகவும் அங்கு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்த 626 பேர், சிகிச்சைகள் நிறைவடைந்து குணமடைந்த நிலையில் சென்றிருப்பதாகவும், கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மய்யம் தெரிவித்துள்ளது.

## முட்டை இறக்குமதிக்கு கோரிக்கை

வெதுப்பக உற்பத்திகளுக்காக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு, அனைத்து இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முட்டையின் தொகை விலை 22 ரூபாய் வரை அதிகரித்துள்ளதால், தாம் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாக, சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் இடையில், விசேட கலந்துரையாடல் ஒன்று, நேற்று (07) இடம்பெற்றுள்ளது.



இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு சென்று, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் டீ.எம்.எஸ். திஸாநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## விசா நிறைவடைந்த இலங்கையர்களை திருப்பியனுப்புகிறது சவூதி அரசாங்கம்

விசா காலம் நிறைவடைந்த நிலையில், சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு, எந்தவொரு தண்டப்பணமும் அறிவிடாது, அவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்ப அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் நிலைமைக்கு மத்தியில், விசா செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்தும் சவூதியில் உள்ள இலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட இலங்கையர்கள் அனைவரையும், நிவாரண அடிப்படையில் இலங்கைக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெருந்தோட்டங்களில் காணப்படும் வெற்றுக் காணிகளை

## ‘தேயிலைச் செய்கைக்காக பகிர்ந்தளிக்க நடவடிக்கை’

### காணிகளில் கட்டடங்களை அமைக்கத் தடை

பெருந்தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத காணிகளைப் பெற்று, அவற்றைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பகிரிந்தளித்து, தேயிலைச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஸ் பத்திரனவுடன் இணைந்து, பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து கையகப்படுத்தாமல் வழங்கவுள்ளதுடன், தேயிலை உற்பத்திக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கி, அந்தக் காணிகளில் எந்தவொரு கட்டடங்களையும் அமைக்காத வகையில், காணிகளை அமைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சில நிறுவனங்களிடம் பல இலட்ச ஏக்கர் காணிகள் எவ்வித உற்பத்தியும் இன்றிக் காணப்படுவதாகவும் இவ்வாறான காணிகள் தேயிலை உற்பத்திக்கு உரிய காணிகள் என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் நிமல்சிறிபால டீ சில்வா, தற்போது இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில், 72 சதவீதமான உற்பத்தி சிறுதோட்டங்களிலிருந்தே பெறப்படுவதாகவும் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபாய் கோரிக்கையை பெருந்தோட்ட நிறுவனங்கள் நிராகரிக்கும் சந்தர்ப்பங்களில் தோட்டத் தொழிலாளர்களின் வீடு உள்ளிட்ட நலன்புரி விடயங்களுக்காக சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியம் என்றும் அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவப்பீடத்துக்கு உள்வாங்கும்

## ‘மாணவர் தொகை அதிகரிக்கப்படும்’

அரச பல்கலைக்கழகங்களின் மருத்துப்பீடங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை, 350ஆக அதிகரிக்க, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நடவடிக்கை எடுத்துள்ளார். பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை, கடந்த காலங்களைவிட அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்தே, கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தீர்மானத்தை எடுத்துள்ளார். அரச பல்கலைக்கழகங்களில் ஒரே தடவையில் அதிகளவான மாணவர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது, இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.





## கடமைகளைப் பொறுப்பேற்பு...

ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஏ.ஜே.எம்.முஸம்மில், ஊவா மாகாண ஆளுநர் காரியாலயத்தில், உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளை நேற்று (07) பொறுப்பேற்றுக்கொண்டார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில், வடமேல் மாகாண ஆளுநராகப் பதவி வகித்த அவர், ஊவா மாகாண ஆளுநராக, சில தினங்களுக்கு முன்பு, ஜனாதிபதிச் செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். சிறிது காலம் மேல் மாகாண ஆளுநராக இருந்த அவர், கொழும்பு மாநகர சபையின் மேயராகவும் செயற்பட்டு வந்தார். இதேவேளை, மலேஷியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராகவும் சேவையாற்றிருந்தார். இவருடைய பதவியேற்பு நிகழ்வில், அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷன தெனிபிட்டிய, ஷாமர சம்பத் தஸநாயக்க, டிலான் பெரேரா, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தோனேஷியா

கடலில் மாதக்கணக்காக இருந்ததைத் தொடர்ந்து

# ஆஷேயில் கரையில் 300 ரோஹிஞ்சாகள்

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவின் வட முனையான ஆஷேயில், ஏறத்தாழ 300 ரோஹிஞ்சாகள் கரைக்கு வந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடலில் மாதக் கணக்கான பயணத்தைத் தொடர்ந்து, 30க்கும் அதிகமான அகதிகள் இறந்ததாக, நம்பப்படுவதைத் தொடர்ந்தே இவர்கள் கரையை அடைந்துள்ளனர்.

பிரதானமாக சிறுவர்கள், பெண்களை உள்ளடக்கிய இவர்கள், கடலில் உள்ளூர்வாசிகளால், அவதானிக்கப்பட்டு அவர்களின் உதவியுடனேயே லொஹொறொசெயுமவேயில் நேற்று அதிகாலை தரையிறங்கியதாக, யுஜொங் பிளாங் கிராமத்தின் தலைவர் முனிர் கட் அலி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், 14 சிறுவர்களையும், 181 பெண்களையும் 102 ஆண்களையும் உள்ளடக்கிய இக்குழுவினரின் உடல்நிலை பாதிப்பில்லாமல் இருந்தது. ஓர் உறுப்பினர் சிகிச்சைக்காக, உள்ளூர் வைத்தியசாலையொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக அப்பகுதி இராணுவத் தலைவர் றொனி மஹேந்திரா கூறியுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில், எவ்வளவு நாள்கள் இவர்கள் ,கடலில் இருந்தனர் என்றோ எவ்வகையான கப்பலில் இவர்கள் சென்றார்கள் என்றோ உடனடியாகத் தெரியவில்லை.



இந்நிலையில், இக் குழுவானது, 200 நாள்களுக்கும் மேலாக, கடலில் இருந்து மீண்டும் மீண்டும் தரையிறங்க முயன்றதாக, ஐக்கிய நாடுகளின் அகதி முகவரகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் இந்திரிகா றத்வத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தியா

கொவிட்–19 தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை;

## 2ஆம் இடத்தில் இந்தியா



உலகளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் இரண்டாமிடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

இந்தியாவில் நேற்றுக் காலை 9.32 மணி வரையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 90,802ஆல் அதிகரித்து 4,204,613ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 1,016 ஆல் உயர்ந்து 71,642ஆகக் காணப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி நேற்று முற்பகல் 11.15 மணி வரையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 6,289,942-ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19ஆல் 188,977 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலானது கடந்த 24 மணித்தியாலங்களில் 14,521 கொவிட்-19 தொற்றுக்களையும், 447 கொவிட்-19ஆலான உயிரிழப்புகளையும் பதிவுசெய்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரமைச்சு தெரிவித்துள்ள நிலையில், அங்கு 4.14 மில்லியன் பேர் கொவிட்-19 தொற்றுக்கு ள்ளானதுடன், 126,650 பேர் கொவிட்-19 ஆல் உயிரிழந்துள்ளனர். அந்தவகையில், உலகளாவிய ரீதியில் 27.2 மில்லியனுக்கும் அதிகமானோர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 890,000க்கும் மேற்பட்டோர் கொவிட்-19-ஆல் உயிரிழந்துள்ளனர்.

**“ தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 90,802ஆல் அதிகரித்து 4,204,613ஆகக் காணப்படுவதுடன், கொவிட்–19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 1,016 ஆல் உயர்ந்து 71,642ஆகக் காணப்படுகிறது**



## இந்தியாவில்...

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஹைப்பர்சொனிக் வாகன சோதனை, ஹைப்பர்சொனிக் தொழில்நுட்பத்துடனான ஓடத்தை வெற்றிகரமாக நேற்று இந்தியா சோதித்துள்ளது. எதிர்கால நீண்ட தூர ஏவுகணை அமைப்புகளுக்கு இது பயன்படும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியா

## காணாமற்போன மக்கள் சீனாவிடமா?

### சீன இராணுவத்தை வினவிய இந்திய இராணுவம்




சீன இராணுவத்தின் கட்டுப்பாட்டில், இந்தியாவின் கிழக்கு எல்லை மாநிலமான, அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து காணாமற்போன ஐந்து இந்தியப் பொதுமக்கள் இருக்கின்றனரா என சீன இராணுவத்தை வினவியுள்ளதாக, இந்திய இராணுவம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

சீனாவாலும் தென் திபெத்தென உரிமை கோரப்படும் அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து காணாமற்போனவர் குறித்து சீன இராணுவத்திடம் கடந்த சனிக்கிழமை தெரிவித்ததாக இந்திய இராணுவம் கூறியுள்ளது.

எல்லைக்கோட்டு நடுவரை பந்தால் தாக்கியமை;

# அமெரிக்க பகிரங்கத் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜோக்கோவிச்



ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நடைபெற்றுவரும் ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை நடைபெற்ற, தனது நான்காவது சுற்றுப் போட்டியில் ,ஸ்பெய்னின் பப்லோ கரென்னோ புஸ்டாவை எதிர்கொண்ட சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச், தனது முதலாவது செட்டில் 5-6 என பின்தங்கியிருந்தபோது சேவிஸில் தவறு விட்டமை காரணமாக கோபத்தில் தனது காற்சட்டைப் பைக்குள் இருந்த பந்தொன்றை வெளியே எடுத்து பின்நோக்கி எறிந்தபோது அது எல்லைக்கோட்டு நடுவரைத் தாக்கியிருந்தது.

அந்தவகையில், இதன் காரணமாக, போட்டியிலிருந்து நொவக் ஜோக்கோவிச் இடைநிறுத்தப்பட பப்லோ கரென்னோ புஸ்டா காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இதேவேளை, தனது நான்காவது சுற்றுப் போட்டியில், கனடாவின் டெனிஸ் ஷபொலொவ்வை எதிர்கொண்ட உலகின் 10ஆம் நிலை வீரரான பெல்ஜியத்தின் டேவிட் கொபின், 7-6 (7-0), 3-6, 4-6, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது நான்காவது சுற்றுப் போட்டியில் ஸ்பெய்னின் அலெஜான்ட்ரோ டேவிடோவிச் ஃபொகினாவை எதிர்கொண்ட உலகின் ஏழாம்நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்ஸான்டர் ஸ்வ்ரேவ், 6-2, 6-2, 6-1 என்ற நேர் செட்களில் வென்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இதேவேளை, நேற்று அதிகாலை நடைபெற்ற தனது நான்காவது சுற்றுப் போட்டியில் எஸ்தோனியாவின் அனெட் கொந்தாவெய்ட்டை எதிர்கொண்ட உலகின் ஒன்பதாம்நிலை வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒஸாகா, 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வென்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

# கனடாவின் வெளிவிவகார கொள்கை 2.0



ஜனகன் முத்துக்குமார்

சர்வதேச நீதிமன்றத்தின் முன் அதன் விண்ணப்பத்தில், காம்பியாவை முறையாக ஆதரிப்பதாக, நெதர்லாந்து மற்றும் கனடா கடந்த புதன்கிழமை அறிவித்திருந்தன. இது தொடர்பில் இவ்விரு நாடுகளும் வெளியிட்டிருந்த அறிக்கையில், பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

“காம்பியாவின் பிராது மியான்மாரில் ரோஹிஞ்சாகளுக்கு, எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தலை - குறிப்பாக, மியான்மாரின் பாதுகாப்புப் படைகள் ரோஹிஞ்சாகளுக்கு எதிராக இலக்கு, முறையான அட்டூழியங்களைச் செய்தமைக்கான சான்றுகளைக் காட்டுகின்றது. குறிப்பாக, வெகுஜனக் கொலை, பாலியல் வன்முறை, சித்திரவதை, கட்டாய இடம்பெயர்வு, உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றை மறுப்பது போன்ற முறையான, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை செய்தமையை குறித்த பிராது காட்டுகின்றது.

இனப்படுகொலைக்கு எதிரான சமவாயம், இனப்படுகொலையின் குற்றத்தைத் தடுப்பதற்கான பொறுப்பான உறுதிமொழியைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், இந்த விண்ணப்பத்தைச் சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு வருவதில், காம்பியா பாராட்டத்தக்க நடவடிக்கையை எடுத்தது. கனடாவும் நெதர்லாந்தும் இந்த முயற்சிகளை ஆதரிப்பது நமது கடமையாக கருதுகின்றன”

குறித்த இந்த நடவடிக்கையின் அடிப்படையில் கனடாவின் உள்நாட்டு அரசியல் எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பதை இப்பத்தி ஆராய்கின்றது.

### சர்வதேச ரீதியில் சரிந்துவரும் கனடாவின் பங்கை மீளக்கட்டியெழுப்புதல்:

இவ்வாண்டு நடைபெற்றிருந்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்குத் தெரிவுசெய்யப்படும் 10 தற்காலிக நாடுகளுக்கான போட்டியில் கனடா பங்கு பற்றியிருந்தது. எப்போதும் இல்லாத அளவுக்கு, கனடாவின் பிரதமரே நேரடியாக கனடாவின் வேட்புமனு தொடர்பாக தொடர்ச்சியாக பேசியிருந்தார். தீவிரமான இராஜதந்திர உந்துதல் இருந்தபோதிலும், கனடா ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை உறுப்புரிமைக்கான போட்டியில் நோர்வே மற்றும் அயர்லாந்துக்கு எதிராக தோல்வியைப் பெற்றிருந்தது. இது பற்றி கருத்துரைத்த பல சர்வதேச ஆய்வாளர்கள், குறித்த தோல்வி - கனடா சர்வதேசத்தில், தனது விட்டுக்கொடுத்தமைக்கான ஒரு தோல்வியாகவும், சர்வதேச அரசியலில் கனடா ஒரு செயற்பாட்டாளராகத் தன்னை வரித்துக்கொண்ட தன்மை போதாது என்றும் பேசியிருந்தார். அதுவே உண்மையாகவும் இருந்திருந்தது.

கனடாவின் துணைப்பிரதமாரான கிறிஸ்டியா பிரீலாண்ட் முன்னாள் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது கடந்த 2017ஆம் ஆண்டில் கனேடிய நாடாளுமன்றில் ஒரு முக்கியமான உரை ஒன்றை ஆற்றியிருந்தார். அதில், கனடா எவ்வாறாக சர்வதேச அரசியலில் ஒரு தலைமைத்துவ நாடாக மாறவேண்டும் என்றும், இரண்டாம் உலகப்போருக்கு பின்னரான காலப்பகுதியில் கனடா சர்வதேச அரங்கில் மேற்கொண்ட சர்வதேச இராஜதந்திர மற்றும் சமாதான செயல்பாடுகளுக்குத் தலைமை தாங்கும் நிகழ்ச்சி நிரலை ஏன் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் சித்திரித்திருந்தார். குறித்த, உரை கனடாவின் அரசியல் மட்டத்தில் ஒரு பேசுபொருளாக இருந்ததுடன், அதுவே கிறிஸ்டினா பிரீலாண்டை சர்வதேச மட்டத்தில் ஒரு நிலையான தலைவராகவும் காட்டியிருந்தது.

எது எவ்வாறாக இருந்த போதிலும், கனடாவின் சர்வதேச நிலைப்பாட்டில் பெருமளவான மாற்றங்கள் ஏற்படவில்லை. கனடா சர்வதேச அரசியல் விவகாரங்களைப் பொறுத்தவரை இரண்டாம் நிலைத் தலைவராகவே தன்னை தொடர்ச்சியாக பார்த்திருந்தது. ஒரு புறம் ஐக்கிய அமெரிக்காவின் கொள்கைகளுக்கு முரண்படாத கொள்கைகளைப் பேணவேண்டிய அவசியத்தில் இருந்த கனடா, மனித உரிமை - போருக்கு பிந்திய கட்டமைப்புகளில் உதவுதல் என்பவற்றில் மட்டுமே பெருமளவில் தமது செல்வாக்கைச் செலுத்தியிருந்தது. காலநிலை மாற்றம் தொடர்பில் கூட, கனேடிய அரசாங்கம் பெருமளவில் பேசினாலும் கூட, கனேடிய உள்நாட்டு அரசியல் நிரலில் தம்மை நிலைநிறுத்துவதற்காக கனடா ஒரு நிலையான செயற்பாட்டை எடுக்க அந்நாட்டின் உள்நாட்டு அரசியல் இடம்கொடுக்கவில்லை.

இந்நிலையிலேயே, பாதுகாப்புச் சபை தோல்விக்கு பின்னராக தம்மை ஒரு சர்வதேச அரசியல் ஆளுமையாக காட்ட கனடா முற்படுவதும், அதன் அடிப்படையிலேயே குறித்த வழக்கில் தலையிட முடிவெடுத்தமையும் பார்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

### தொடர்ச்சியான சீன எதிர்ப்பு கொள்கையில், இரண்டாம் நிலையை அடைதல்:

சீனா - கனடா பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் ஹுவாவி நிறுவன தலைமை அதிகாரியை கனடாவில் கைது செய்தமையை தொடர்ந்து உச்சம் பெற்றுள்ள இந்நிலையில், கனடாவும் சீனாவும் குறித்த அரசியல் பொருளாதார நிலைமைகளை சீர்செய்வதற்கு பெரிதும் நாட்டமெடுக்கவில்லை. இதற்கு ஒரு காரணம், சீனாவுக்கு எதிரான கொள்கையை பெரும்பாலும் எல்லா மேற்கத்தேய நாடுகளும் கொண்டுள்ளமையும் அதன் நிகழ்ச்சி நிரலில் கனடா தனித்திருக்க விரும்பாமையும் ஆகும். இந்நிலையில், தொடர்ச்சியாக சீனாவின் ஆதரவில் இருக்கும் மியன்மாரின் அரசுக்கு எதிரான நடவடிக்கையை முடுக்கிவிடுதல், சீனாவின் அதிகாரத்துக்கு உட்பட்ட தாய்வான் மற்றும் ஹொங்கொங் பிரச்சினைகளை சர்வதேசம் கையிலெடுக்க ஒரு துருப்பாக அமையும் எனக் கனடா கருதுகின்றது. தாய்வான் மற்றும் ஹொங்கொங் ஆகிய இடங்களிலிருந்து பெருமளவான மக்கள் கனடாவில் குடிபுகுந்துள்ள இந்நிலையில், கனடா -சீனாவுக்கு எதிரான ஒரு மறைமுகமான நடவடிக்கையை மேற்கொள்ளுதல், உள்நாட்டில் குடிபுகுந்தவர்களின் வாக்குகளை வருகின்ற தேர்தலில் பெற்றுக்கொடுக்கும் என ஆளும் லிபரல் கட்சி நம்புகின்றது.

### 3. கனடாவின் உள்நாட்டு நிலைமை:

லிபரல் கட்சி தனிப்பெரும்பான்மை இன்றி இருக்கும் இந்த அரசாங்கம் ஒரு நிலையான அரசாங்கமாக இருக்கும் என லிபரல் கட்சி உட்பட ஒருவரும் நம்பவில்லை. கனேடிய நாடாளுமன்ற தேர்தல் எப்போதும் நடக்கலாம் என்ற இந்நிலையில், சர்வதேச மட்டத்தில் கனடா மேற்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கையை மக்களுக்கு காட்டுவதற்கு குறித்த வழக்கில் பங்காளியாக மாறுதல் ஒரு சரியான விடயமாக இருக்கும் என கனடா நம்புகின்றது. அதில் உண்மையும் இருக்கின்றது. கனேடிய மக்கள், சர்வதேச மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ந்து கரிசனை உடையவர்கள் என்ற ரீதியில், குறித்த வழக்கில் பங்காளிகளாக மாறுதல் உண்மையில் கனேடிய அரசியலில் செல்வாக்கு செலுத்தும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எது எவ்வாறாக இருந்தாலும், ஒரு வழக்கில் பங்காளியாக இருப்பது மட்டும் சர்வதேசத்தில் அடையாளத்தை பெற்றுக்கொடுக்கும் என்று கனடா நம்புவதற்கு இல்லை. மாறாக, இது கனடாவின் மாற்றம் பெரும் வெளிவிவாக நடவடிக்கையில் ஒரு சிறிய நிகழ்ச்சி நிரலாக இருக்கும் என்பதே தற்போதைய கணிப்பாகும்.

# வாய்ச்சொல் வீரத்துக்குச் செயல்வடிவம் தேவை...

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் வாய்ச்சொல் வீரர்களாகவே இருந்து வருகிறார்கள். தம் வாய்ச்சொல் வீரத்துக்குச் செயல்வடிவம் கொடுப்பவர்கள் மிகக்குறைவு. அத்தகைய குறைகள் நிவர்த்திக்கப்படும்வரையில் பாதிக்கப்படுபவர்களுக்கான நிரந்தரத் தீர்வுகள் சாத்தியமாகப் போவதில்லை.

அந்தவகையில், மலையகப் பெருந்தோட்டங்களில் குளவிக்கொட்டுக்கு இலக்காகும் தொழிலாளர்களின் அவலத்துக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக வாய்ச்சொல் வீரங்காட்டிய எந்தவோர் அரசியல்வாதியாலும், அதற்குச் செயல்வடிவம் கொடுக்கமுடியவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இன்றும் அம்மக்கள் பெருந் துயரங்களையே சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஹட்டன் - லெதண்டி தோட்டம் புரொடக் பிரிவில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 8 பேரும், மஸ்கெலியா - சாமிமலை, ஒல்டன் கிங்கோரா தோட்டத்தில் தேயிலை மலையில் பணி செய்துகொண்டிருந்த 4 தொழிலாளர்களும் நேற்றையதினம் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். குளவிக் கொட்டுக்கு இலக்காகிய சிலர், தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறான குளவித் தாக்குதல்கள், மலையகத்தின் பல பாகங்களிலும் தொடர்ந்து இடம்பெறுவதைத் தடுக்க முடியமைக்காக மலையக மக்கள் பிரதிநிதிகள் வெட்கப்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த காலத்திலும், நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னரும் இந்த மலையக மக்களின் பிரச்சினைகளை உயர்த்திப் பிடித்துப் பேசிய அரசியல்வாதிகள் எங்கே என்பதை, இன்னமும் தேடவேண்டி இருக்கிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவும் இந்த விடயத்தைப் பற்றித் தெளிவுபடுத்தி, உடனடியாகத் தீர்வு பெற்றுக்கொடுக்குமாறும் பணித்திருந்தார். இந்தப் பணிப்பு வழங்கப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், இன்னமும் குளவிக் கொட்டைத் தவிர்ப்பதற்கான நிரந்தரத் தீர்வைப் பெறமுடியவில்லை.

தற்போது இராஜாங்க அமைச்சராக இருக்கின்ற ஜீவன் தொண்டமானும் குளவிக் கொட்டைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் துரித்தப்படுத்துவதற்குப் பல பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக அறிக்கை விட்டிருந்தார். சந்திப்புத் தொடர்பான படங்களும் வெளிவந்திருந்தன. ஆனால், இன்னமும் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அதிகாரத்தில் இருப்பவர்கள்தான் அசமந்தமாக இருக்கின்றார்கள் என்றால், இதற்கு முன்னர் அதிகாரத்தில் இருந்தவர்களும் அசமந்தமாகவே இருந்திருக்கிறார்கள். இனிமேலாவது, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றப் பழகிக்கொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் அம்மக்களின் துயர் துடைப்பவர்களாக இருக்கவேண்டுமே தவிர, மக்களைத் தொடர்ந்தும் துன்பத்துடன் வாழவைப்பவர்களாக இருக்கக்கூடாது. குளவிகளின் அட்டகாசத்தைத் தடுப்பது தொடர்பில் ஆட்சியாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

தமிழ்Mirror
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk







# மீதமிருக்கின்ற ஜனநாயகம்

**மொஹமட் பாதுஷா**

இலங்கையின் அரசமைப்பின் சில விடயங்களில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான உத்தேச 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில், ஆட்சியாளர்களின் அதிகார வேட்கை மற்றும் ஜனநாயகத்தின் ஆட்சி பற்றிய கேள்விகளும் சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்காலம் தொடர்பிலான ஐயப்பாடுகளும் மேலெழுந்துள்ளன. புதிய திருத்தச் சட்டமூலமானது, 'ஜனநாயகத்தை இல்லாதொழிக்கும் செயற்பாடு' என்று, பிரதான எதிர்க்கட்சிகளும் சில சிறுபான்மைக் கட்சிகளும் கூறிவருகின்றன. ஆனபோதிலும், ஆளும் பொதுஜன பெரமுன, மேற்குறிப்பிட்ட விமர்சனங்களை எல்லாம் கணக்கிலெடுக்காமல், நாட்டின் ஸ்திரத்தன்மையை இது உறுதிப்படுத்துவதற்கான திருத்தமே என்றும் இச்சட்டமூலத்தை நிறைவேற்றியே தீருவோம் என்ற தோரணையில், அடுத்தகட்ட நகர்வுகளைச் செய்யத் தொடங்கியிருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்று கூறி, 2015இல் ஆட்சிபீடமேறிய மைத்திரி - ரணில் கூட்டு அரசாங்கம், உண்மையில் நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக இல்லாமலாக்கியதாகக் கூறமுடியாது. ஆனால், ஜனாதிபதியின் அதிகாரங்கள், ஓரளவுக்குக் குறைக்கப்பட்டன. பின்வந்த காலத்தில், வினைத்திறனற்றதும் கோமாளித்தனமானதுமான ஓர் அரசியல் போக்கை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கடைப்பிடித்ததாக விமர்சனங்கள் எழுந்தாலும் கூட, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், தனக்குள்ள அதிகாரங்களைக் குறைப்பதற்கு முன்வந்தமை அபூர்மான ஒன்றாகவே கருதப்பட்டது.

ஆனாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் தோல்விகரமான அரசியல் எவ்வாறு பொதுஜன பெரமுனவுக்கு சாதகமாக அமைந்ததோ, அவ்வாறே 19ஆவது திருத்தத்தின் பலாபலன்களை நாட்டு மக்களுக்காக சரியாகப் பயன்படுத்தாமல் விட்டதும் அதேபோன்று, 19ஆவது திருத்தமே ஸ்திரமற்ற ஆட்சிக்கு வழிகோலியது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியதுமே, 20ஆவது திருத்தச் சட்டமூலம் பற்றிய சாதகமான மனோநிலையை அல்லது எதிர்ப்பற்ற நிலையை பெரும்பான்மையான சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம்.

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் அதிகமான திருத்தங்கள், 20ஆவது திருத்தச் சட்டமூலம் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தத்தை நிறைவேற்றிய குறுகிய காலத்துக்குள்ளேயே புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, தமக்கு விரும்பிய உள்ளடக்கங்களைக் கொண்ட புதிய அரசமைப்பு வருவதற்கிடையிலேயே நடைமுறையில் இருக்கின்ற 2ஆம் குடியரசு யாப்பில் திருத்தமொன்றை மேற்கொள்ள அவதிப்படுகின்றமையானது, பல்வேறு செய்திகளை உணர்த்தி நிற்கின்றது.

செப்டெம்பர் 2 வெளியிடப்பட்டுள்ள 42 பக்கங்களைக் கொண்ட வர்த்தமானி, பல்வேறு திருத்த முன்மொழிவுகளை உள்ளடக்கியிருக்கின்றது. 2019இன் ஊடாக, பிரதான ஆட்சியாளர் தாம் இழந்ததாகக் கருதுகின்ற முக்கிய அதிகாரங்கள், இதனூடாக மீளப் பெறப்படவுள்ளதாகச் சொல்லலாம். இது, ஜனநாயகத்தைக் கேள்விக்குள்ளாக்கும் என அவதானிகள் கூறுகின்றனர்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் அறிமுகப்படுத்திய பல விடயங்களிலும் அதற்கு முன்பிருந்த ஒரு சில சட்ட ஏற்பாடுகளிலும், தமக்கு விரும்பியவாறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எத்தனம் செய்துள்ளதைக் காணமுடிகின்றது. இத்திருத்தமானது, ஜனாதிபதியை நோக்கி அதிகாரங்கள் குவிக்கப்படுவதற்கு வழிகோலும் என்ற தோற்றப்பாடு, பரவலாகவே ஏற்பட்டிருக்கின்றது. இருப்பினும், ஆணைக்குழுக்கள் (சில மாற்றங்களுடன்) தொடர்ந்து இயங்குவதற்கும் தகவல் அறியும் சட்டமூலம் நடைமுறையில் இருப்பதற்கும், உத்தேச திருத்தத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் 2 தடவைக்கு மேல் போட்டியிட முடியாது என்ற கட்டுப்பாட்டை மாற்றியமைக்கும் யோசனையும் முன்வைக்கப்படவில்லை என்பதை கவனிக்க வேண்டும். 20ஆவது திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்ட சில திருத்தங்களை, உத்தேச வரைபு உள்ளடக்கி இருக்கவில்லை என்பது ஆறுதலான விடயம்தான். ஆயினும், எல்லா அதிகாரங்களையும் ஓரிடத்தில் குவிப்பதற்கான ஒரு முன்னேற்பாடாகத் தோன்றும் உத்தேச திருத்தம், கொஞ்சமாவது மீதமிருக்கின்ற ஜனநாயக நடைமுறைகளில் பின்னடைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்றே கருத வேண்டியுள்ளது.

உத்தேச 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை எதிர்ப்பதாகவும் இதனைத் தோற்கடிக்க முன்னிற்கப் போவதாகவும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ஆனால், திருத்தங்கள் எதுவுமின்றி இந்தத் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவோம் என்று அமைச்சர் தினேஸ் குணவர்தன அடித்துக் கூறியிருக்கின்றார்.

ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சி என்று இதனை வர்ணித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஏனைய கட்சிகளுடன் இணைந்து, 20ஐ தோற்கடிக்க முன்னிற்கப் போவதாக அறிவித்துள்ளது. இதேவேளை, இத்திருத்தத்தின் ஊடாக, தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்பில்லை என்று, சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவரான டக்லஸ் தேவானந்தா கூறியிருக்கின்றார்.

ஆயினும், பிரதான முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், இன்னும் மௌனம் கலைக்கவில்லை. கடந்த காலங்களில், முஸ்லிம்களுக்கு பாதகமான எத்தனையோ சட்டமூலங்களும் திருத்தச் சட்டமூலமும் கொண்டுவரப்பட்ட வேளையில், நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பில் அதிகாரத்துடன் இருந்தபோதே, அதனைத் தடுத்து நிறுத்தாத அல்லது கூட்டத்துடன் கையுயர்த்திய வரலாறு, முஸ்லிம் கட்சிகளுக்கு இருக்கின்றது.

எனவே, உத்தேச 20ஆவது திருத்தத்தில், ஆளும் தரப்பில் இருக்கின்ற முஸ்லிம் எம்.பி.க்கள், வழக்கம்போல 'ஒத்து ஊதுவார்கள்' என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. எதிரணியில் உள்ள கணிசமான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உத்தேச திருத்தச் சட்டமூல விடயத்தில் "பாம்புக்கும் நோகாமல் பாம்புஅடித்த கம்புக்கும் நோகாமல்" செயற்படலாம். ஓரிருவர் ஆதரவளித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உத்தேச 20ஆவது திருத்தச் சட்டமூலம், மிகவும் நுட்பமாக வரைபு செய்யப்பட்டுள்ளது. இதனைப் பார்க்கின்ற சாதாரண சிங்கள மக்களுக்கு, இது ஒரு பாரதூரமான, ஆபத்தான திருத்தமாகத் தெரியாது. நல்லாட்சி காலத்தைப் போலன்றி, ஒரு ஸ்திரமான ஆட்சியை நிலைத்திருக்கச் செய்வதற்காகவே ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படுவதாக சிங்கள மக்களிடத்தில் பரப்புரை மேற்கொள்ளப்படுமிடத்து, அதனை அவர்கள் நம்புவார்கள். இதிலுள்ள பாதகமான விடயங்கள் பற்றி, படித்த, முற்போக்குச் சிங்கள சக்திகளே வெளிப்படையாகப் பேசும்.

எனவே, சிறுபான்மை முஸ்லிம்களும் தமிழர்களும் பார்க்கின்ற கோணத்தில், பெரும்பான்மைச் சிங்கள மக்கள் இதனைப் பார்ப்பார்கள் என்று நம்ப முடியாது. 19ஆவது திருத்தத்தின் அதிகப்படியான அனுகூலங்கள், சிங்கள மக்களைச் சென்றடைய வழிசெய்திருந்தால், ஒருவேளை அவ்வாறான நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், சிங்கள மக்களது வரவேற்பைப் பெற்ற தகவலறியும் சட்டம், ஆணைக்குழுக்கள் போன்ற விடயங்களில் கை வைக்காமலேயே, அரசாங்கம் 20ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்துள்ளமை இந்த இடத்தில் கவனிக்கத்தக்கது.


20ஆவது திருத்தச் சட்டமூலம், இதற்கு முன்னர் இரு தடவைகள் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால், அதன் முன்மொழிவுகள் வேறுபட்டவை என்பதுடன், அது நிறைவேற்றப்படவும் இல்லை. எனவே, புதிய 20ஆவது திருத்தமும் நிறைவேற்றப்படாமல் விடக்கூடும் என்றாலும், அதற்கான நிகழ்தகவுகள் மிகக் குறைவாகும்.

இந்தச் சட்டமூலம், நாடாளுமன்றத்தின் விவாதத்துக்கு விடப்படுதுடன், வழக்கம்போல திருத்தங்களுக்கும் உட்படலாம். ஆயினும், திருத்தங்கள் இல்லாமல் அதனை நிறைவேற்றுவதற்கே ஆளும் பொதுஜன பெரமுன பிரயாசைப்படுகின்றது. அதற்கான பலமும் திட்டங்களும், ராஜபக்‌ஷர்களிடம் இருக்கின்றன. ஆளும்கட்சி நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை பெற்றிருக்கின்றது. சுதந்திரக் கட்சிக்காரர்கள் அல்லது வேறு யாரும் 20ஆவது திருத்தச் சட்டமூலம் விடயத்தில் முரண்டுபிடிக்கலாம் என்ற அனுமானங்கள் கூறப்படும் நிலையில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த 9 பேர் ஆதரவளிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன், ஏற்கெனவே அரசாங்கத்துடன் இரகசியத் தொடர்புகளைப் பேணி வருகின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஓரிரு முஸ்லிம் எம்.பி.க்களும் ஆதரவளிக்கலாம்.

இந்தப் பின்னணியில், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும், பல்வேறு விமர்சனங்கள், எதிர்ப்புகள் ஏற்பட்டாலும்கூட, உத்தேச திருத்தச் சட்டமூலத்தை எவ்வாறு வெற்றிபெறச் செய்வது, அதன்பின்னர் எவ்வாறு புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது என்பதற்கான சூட்சுமங்களை, ஆளும் தரப்பு அறியும். தனது இலக்கை அடைவதற்கான எந்த எல்லைவரையும், இந்த ஆட்சியாளர்கள் போவார்கள் என்பதும் நாடறிந்த விடயம்தான்.

உண்மையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அல்லது ஜனாதிபதியிடம் அதிக அதிகாரங்கள் இருக்கும் விதத்திலான ஆட்சி முறைமை என்பது சிறுபான்மை மக்களுக்கு ஒரு காப்பீடாகவும் கருதப்படுகின்றது. நாடாளுமன்றத்திலோ அதற்கு வெளியிலோ, தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான ஏதேனும் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஜனாதிபதி நினைத்தால், சிறுபான்மையினருக்கு சாதகமான முடிவுகளை எடுக்க இவ்வதிகாரம் வசதியளிக்கும். ஆனால் கடந்த காலங்களில், முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் அநியாயங்கள் இழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், நிறைவேற்றதிகாரம் சிறுபான்மையினருக்கு சார்பாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகும். அவ்வாறே, 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அதிகார மாற்றங்களாலும், சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள் எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

ஆக மொத்தத்தில், அரசமைப்பில் என்ன திருத்தம் வந்தாலும், அல்லது புதிய யாப்பே கொண்டு வரப்பட்டாலும், எல்லா ஆட்சியாளர்களும் பொதுவாகச் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதையே முதன்மைத் தெரிவாகக் கொள்வர். சிறுபான்மையினருக்கு சார்பாகத் தமது அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்காத வரை, எழுத்தில் என்னதான் சட்ட ஏற்பாடுகள் இருந்தாலும் நமக்குப் பயனில்லை. இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, 20ஆவது திருத்தச் சட்டமூலத்திலும் அதற்குப் பின்னரான உத்தேச அரசமைப்பிலும், கூடுமானவரை தமது அபிலாஷைகளை உறுதிப்படுத்துவதற்கான வியூகங்கள், தமிழ், முஸ்லிம் கட்சிகள் வகுக்க வேண்டியுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

இந்தத் தேகம் வலுவானது, இதனுள் இருக்கும் உயிர், தன்னை விட்டு, தற்போது போக முடியாது. நானே பெரியவன், எனக்குச் செல்வம், பலமிக்க பதவி எல்லாமே இருந்தபடியே இருக்கும் என எண்ணுவதுடன், தன்னை அழிக்க யார் இருக்கிறார்கள் எனச் சொல்பவர்கள், இரண்டு நாள்கள் காய்ச்சல் விடாமல் இருந்தால், சோர்ந்து தடுமாறி விடுகின்றனர்.

ஆயினும், இந்த நோய் குணமானதும், இதே மனிதன், மீண்டும் வீரம்பேச ஆரம்பிக்கின்றான். இதுதான் மானுட வாழ்க்கை.

வாழ்க்கையை முறையாக வாழாதுவிட்டால், அவன் பலவீனமான மனிதன்தான். எவ்வளவு சொத்து, சுகம், கல்வி, செல்வாக்கு இருந்தாலும், சொந்த வாழ்க்கை, அவனுக்குப் பூச்சியம். உயிர் என்பதே, எப்போது விலகி ஓடிவிடும் எனத் தெரியாமல் வாழும் அறிவிலிகளே அநேகர். பொய்மைக்கு வெள்ளை அடித்திட முடியாது. பகட்டான வாழ்வில், உண்மையைத் தேட முடியாது.

அருவ வாழ்வில் உருவைக் காண முடியாது. பரந்த உலகில், நாங்களும் ஒரு மனிதன். ஆத்ம சமத்துவமே முழுமை தரும்.

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### பாலம் உடைந்ததால்

## இரண்டு கிராமங்களுக்கான போக்குவரத்துகள் பாதிப்படைந்துள்ளன

கம்பளை நகரசபை- கங்கஹிகலகோரள பிரதேச சபைக்கு உட்பட்ட கம்பளவெல பிரதேசத்தை இணைக்கும் கம்பளவெல பிரதான பாலத்தின் ஒரு பகுதி உடைந்துள்ளதால், இரு கிராமங்களுக்கான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் உடைந்து ஆறு வருடங்களாகின்ற போதிலும், அதனைத் திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இதனால், கம்பளை நகர சபைக்கும் கங்கஹிகலகோரள பிரதேச சபைக்கும் உட்பட்ட பிரதேசங்களின் தொடர்பு, முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசங்களுக்குச் செல்வதற்கு, பல கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரி, பிரதேச மக்கள் பலமுறை ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இப்பாலத்தைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவில்லை என்று, பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

– பா.திருஞானம்



### எரிபொருள் விலை

# அதிகரிக்கும்?

அடுத்த சில மாதங்களில் உலகச் சந்தையில் எரிபொருளின் விலை தொடர்ந்தும் உயர்வடையுமாயின், உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் எரிபொருளின் விலைகளை அதிகரிப்பதற்கான நிலை அரசாங்கத்துக்கு ஏற்படும் என, திறைசேரியின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி வீழ்ச்சி அடைந்துள்ளதாலும், சுற்றுலாத்துறையினூடாக வருமானத்தை இழந்துள்ளமை மற்றும் வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புகை வீழ்ச்சியடைந்துள்ளமை போன்ற காரணிகளால், அரசாங்கத்தின் வருமானத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால், எரிபொருள் மீதான வரியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை கண்டிப்பாக அரசாங்கத்துக்கு ஏற்படும்.

எரிபொருள் விலை குறைவாக காணப்படுவதானது, வாகனங்களைப் பேணும் ஒரு குழுவினருக்கு மாத்திரம் அனுகூலமாக அமைந்திருக்கும். ஆனாலும், வரி வருமானத்தினூடாக சமூக நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் பொதுச்சேவைகளை பேணல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.



நவம்பர் வரையில் இறக்குமதி செய்யப்படும் வடிகட்டிய எரிபொருள் மீதான வரியை நிதி அமைச்சு அமல்படுத்தியுள்ள நிலையில், இதனால் சந்தையில் எரிபொருள்களின் விலைகளில் மாற்றம் ஏற்படாது எனவும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி ஆகிய மேலதிக வரியை ஏற்க வேண்டியிருக்கும் என்றார்.

2020 ஜனவரி முதல், ஜூன் வரையில் இறக்குமதி வரி (புதிய வரி) அமல்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும், அதன் பின்னர் ஒகஸ்ட் வரையில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தற்போது செப்டெம்பர் முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்கு இந்த வரி விதிப்பு அமல்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்தச் சுமையை பொதுமக்கள் மீது சுமத்த வேண்டாமென இரு நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களின் கீழ், பெற்றோல் 92 ஒக்டேன் வகை ஒரு லீற்றர் மீது 20 ரூபாய்க்கு வரி விதிக்கப்படும்.

குறைந்த சல்பர் சுப்பர் டீசல் லீற்றருக்கு 30 ரூபாய், அதிக சல்பர் கொண்ட டீசலுக்கு 12 ரூபாய் மற்றும் இதர டீசலுக்கு 20 ரூபாய்க்கு என வரி விதிப்பு பின்பற்றப்படுகின்றது.

இந்த நிலை காரணமாகவும், ஊழியர்களுக்கான செலவு, இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் நட்டம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி எதிர்நோக்கியுள்ள உயர் வரிச் செலுத்தல்கள் போன்ற காரணிகளால், இந்த இரு நிறுவனங்களுக்கும் வருட இறுதி வரையில் எரிபொருளின் விலைகளை இது மட்டத்தில் பேண முடியாத நிலையை தோற்றுவிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் இறக்குமதியால் இழப்புகள் ஏற்பட்ட போதிலும், கொவிட்-19 முடக்க நிலையால் எரிபொருள் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டமை போன்ற காரணிகள் நிலவிய போதிலும், இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்படும் எரிபொருள் விலையை தாமும் பேணுவதாக லங்கா ஐ.ஓ.சி முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்தார்.

தற்போதைய விலைகளில் பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை செய்வதன் காரணமாக நிறுவனத்துக்கு லீற்றர் ஒன்றுக்கு ரூ. 6 முதல் 7 வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் வருட இறுதி வரை எரிபொருள் விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல், இதே நிலையைப் பேணுவதற்கு குறிப்பிடத்தக்களவு வரிக் குறைப்பை தாம் வரவேற்பதாகவும் குறிப்பிட்டார்.


## பங்குச் சந்தை

COLOMBO STOCK EXCHANGE

2018.11.07

| அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண் | S&P SL20 விலைச் சுட்டெண் |
|---|---|
| 5,310.67 | 2,307.89 |

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2018.11.07

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| எஸ்எம்பி லீசிங் (சாதாரண) | 0.20 | 0.30 | 0.10 |
| ஆர் ஐ எல் ப்ரொபர்டி | 4.50 | 5.80 | 1.30 |
| மெக்வூட் எனர்ஜி | 1.60 | 2.00 | 0.40 |
| போகல க்ரஃபிட் | 16.00 | 19.80 | 3.80 |
| நேஷன் லங்கா | 0.70 | 0.80 | 0.10 |
| முல்லர்ஸ் | 0.80 | 0.90 | 0.10 |
| பிரமல் க்ளாஸ் | 3.70 | 4.10 | 0.40 |
| ஹொட்டல் சிகிரியா | 46.60 | 51.60 | 5.00 |
| ஈ- செனலிங் | 5.10 | 5.60 | 0.50 |
| கார்கோ போட் | 43.90 | 48.00 | 4.10 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| ஈடன் ஹொட்டல் லங்கா | 13.00 | 11.50 | (1.50) |
| லக்ஷ்சபான | 16.80 | 15.20 | (1.60) |
| பெல்ம் கார்டன் ஹொட்டல் | 19.40 | 18.00 | (1.40) |
| பிம்புத் பின். | 10.10 | 9.50 | (0.60) |
| அமானா டக்ஃபுல் | 6.80 | 6.40 | (0.40) |
| சிங்கர் இன்ட். | 63.10 | 60.20 | (2.90) |
| சிலோன் இன்வஸ். | 45.00 | 43.10 | (1.90) |
| அமானா பேங்க் | 2.40 | 2.30 | (0.10) |
| ஃபோர்ட்ரெஸ் ரீஸோர்ட் | 10.40 | 10.00 | (0.40) |
| டெல் லங்கா | 11.00 | 10.60 | (0.40) |

## ஐடியல் ஃபர்ஸ்ட் சொய்ஸின் Bosch சேவை நிலையம்



இலங்கையில் கார் மற்றும் இலகு ரக ட்ரக்களின் பராமரிப்புச் சேவைகளை மேற்கொள்ளும் நிலையமான Ideal first choice Pvt Ltd, டீசல் பம்பி பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு Bosch சேவை நிலையத்தை, கொழும்பில் திறந்துள்ளது. இந்த நிலையத்தினூடாக வர்த்தக நாமம் பொறிக்கப்பட்ட பம்பிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை போன்றன முன்னெடுக்கப்படும். கொழும்பு - பஞ்சிகாவத்தை பகுதியில் அமைந்துள்ள இந்த நிலையம், Bosch டீசல் பம்பிகளை பழுது பார்ப்பது மற்றும் சேவைக்குட்படுத்துவது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும். அத்துடன், வாடிக்கையாளர்களின் Bosch உதிரிப்பாகங்களுக்கான கேள்வியையும் நிவர்த்தி செய்யும்.

உலகத் தரம் வாய்ந்த கார் பராமரிப்பு சேவைகளை சகல கார் மாதிரிகளுக்கும் வழங்குவதுடன், சகல வசதிகளையும் கொண்ட கார் பராமரிப்புச் சேவை நிலையங்களையும், முறையாக பயிற்சி பெற்ற பொறியியலாளர்களையும் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சிறந்த சேவை வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதுடன், சிறந்த சேமிப்பு மற்றும் மன நிம்மதியையும் வாடிக்கையாளருக்கு வழங்குவதாக அமைந்துள்ளது. நாட்டின் பிரதான நகரங்களில் நவீன வசதிகளைக் கொண்ட சேவை நிலையங்களைக் கொண்டுள்ளது.

இந்தப் புதிய சேவை நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, ஐடியல் குரூப் தவிசாளர் நளின் ஜே. வெல்கம, சட்டம் மற்றும் கூட்டாண்மை விவகாரங்களுக்கான பணிப்பாளர் நிமிஷா வெல்கம, ஐடியல் மோட்டர்ஸ் பணிப்பாளர் சமிந்த வணிகரட்ன மற்றும் Bosch ஸ்ரீ லங்கா முகாமைத்துவ பணிப்பாளர் ஆர். சுவாமிநாதன் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

### மலேசியாவின் Signature குழுமத்துடன்

## Singer கைகோர்ப்பு

Singer, மலேசியாவின் Signature Group உடன் கைகோர்த்துள்ளது. இந்தப் புதிய பங்குடைமையின் மூலம், Signature சமயலறை அமைப்புகள் மற்றும் தயாரிப்புகளை Singer இலங்கையில் தயாரிக்கவுள்ளது. இந்த உடன்படிக்கை இலங்கையில் Signature வர்த்தகநாமத்தை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது ஐரோப்பியத்தன்மை, நேர்த்தி, ஸ்டைல் ஆகியவற்றைக் கொண்ட, உயர் தரமான மூலப்பொருள்களால் தயாரிக்கப்படும் உற்பத்திகளை உள்நாட்டு நுகர்வோருக்கு வழங்கவுள்ளது என, Singer வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




Singer இலங்கையில் Signatureஇன் புதுமையான தயாரிப்பு வரிசையை முதன்முறையாக Singer Homes, இரத்மலானையில் காட்சிப்படுத்துவதுடன், முதற்கட்டத்தில் மேலும் 30 விற்பனை நிலையங்களுக்கு இதனை விரிவுபடுத்தவுள்ளது.

Singer தனது அதி நவீன Singer தொழிற்சாலை வளாகத்தில் Signature சமையலறை அமைப்புகளை உற்பத்தி செய்யுமென்பதுடன், Signature Kitchenஇன் ஆதரவுடன் இலங்கை வீடுகளின் சமையல் திறனை விரிவுபடுத்த புத்தாக்க யோசனைகளை பயன்படுத்தும். மலேசியாவின் Signature குழுமம் FORBES ASIA Best Under a Billion கௌரவம், 2016 MSWG-ASEAN Corporate Governance Excellence விருது உள்ளிட்ட பல விருதுகளையும் முன்னைய ஆண்டுகளில் பெற்றுக்கொண்டுள்ளது.

மலேசியாவின் Signature Kitchen, 25 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவம் மற்றும் 15 நாடுகளில் வலுவான பிரசன்னத்தைக் கொண்டதுடன், சமையலறைகள் மற்றும் அலுமா ரிகளில் புதுமையான மற்றும் சமகால ஐரோப்பிய வடிவமைப்போடு கூடிய தயாரிப்புகளை வழங்குவதில் புகழ்பெற்றது.

Signature Kitchenஆனது, ஆசிய சந்தைக்குச் சமையலறை அமைப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதில் முன்னணியில் உள்ளதுடன், சில்லறை விற்பனை பிரிவுகளிலும் அதன் சிறப்பான செயற்பாட்டைத் தொடர்கிறது.

தரம், செயல்பாடு, வடிவமைப்பு மற்றும் ஸ்டைல் ஆகியன Signature Kitchenஇல் நன்கு பேணப்படுகின்றது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

TT RATES

ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT

DATE : 07 NOVEMBER 2018

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 131.74 | 138.01 |
| Canadian Dollar | 138.36 | 144.43 |
| Chinese Yuan (Renminbi) | 25.75 | 27.88 |
| Euro | 215.29 | 222.90 |
| Japanese Yen | 1.70 | 1.78 |
| Singapore Dollar | 132.87 | 138.31 |
| Sterling Pound | 241.16 | 249.24 |
| Swiss Franc | 198.06 | 206.24 |
| US Dollar | 183.00 | 187.30 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 491.28 |
| Kuwait | Kuwait Dinar | 605.40 |
| Oman | Oman Rial | 481.07 |
| Qatar | Qatar Riyal | 50.86 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 49.38 |
| UAE | UAE Dirham | 50.42 |

சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரெண்ட் | 41.97 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 43.42 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 46.40 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 44.57 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 40.60 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2020 செப்டெம்பர் 07இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்

| | |
|---|---|
| மறு நாள் | 8.46 |
| 7 நாட்கள் | 8.73 |
| 1 மாதங்கள் | 9.24 |
| 3 மாதங்கள் | 10.00 |
| 6 மாதங்கள் | 10.62 |
| 12 மாதங்கள் | 11.50 |

## பன்னிப்பிட்டிய தனியார் மருத்துவமனையில் சலுகைகள்

கொரோனா தொற்று நோயால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்திற்கொண்டு, பன்னிப்பிட்டி தனியார் மருத்துவமனையின் நிர்வாகம் நோயாளிகளுக்கு வழங்கப்படும் அனைத்துச் சேவைகளிலும் கட்டணங்களைக் குறைக்க முடிவுசெய்துள்ளது.

இந்தச் சிறப்பு விலை குறைப்பு நோயாளிகளின் சிகிச்சையிலும் ஆய்வக சோதனைகளுக்கும் தங்கி இருந்து சிகிச்சைப்பெறும் நோயாளிகளுக்கு செல்லுபடியாகும் எனவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. தேவையற்ற செலவுகளை நீக்கி, நோயாளிகளுக்கு அந்தச் சேமிப்பு மற்றும் சலுகைகளை வழங்கும் எமது மருத்துவமனைக்கு கிடைக்கும் பணத்துக்கு மேல் பொது சேவைக்கு முன்னுரிமை அளிக்கிறது.



செலவு குறைந்த மருத்துவமனையாக, மிக உயர்ந்த தரங்களை பராமரிப்பது எப்போதும் எங்கள் முன்னுரிமை. மிகவும் மலிவு விலையில் மருத்துவ சேவைகளை வழங்குவதில் நன்கு அறியப்பட்ட எங்கள் மருத்துவமனை, எங்கள் சேவைகளின் விலையை மேலும் குறைக்க முடிவு செய்துள்ளது.

### நைன்வெல்ஸ் வைத்தியசாலையுடன்

## AIA ஒப்பந்தம் கைச்சாத்து

முற்றிலும் இலவசமான ரூ. 1 மில்லியன் பெறுமதியான உலகளாவியத் தனி நபர் விபத்து ஆயுள் காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதன் மூலம் பெற்றோர் ஸ்தானத்துக்குக் காலடி எடுத்து வைக்கும் குடும்பங்களுக்கான இடர்காப்பு மற்றும் நிதியியல் பாதுகாப்பை வழங்குவதற்காக AIA நைன்வெல்ஸ் வைத்தியசாலையுடன் கூட்டாண்மை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளது.




AIAஇன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "குழந்தை ஒன்றைப் பெறுவதென்பது தம்பதிகளுக்கு மிகவும் அற்புதமானதொரு தருணமாகும், அதாவது இது அவர்களுக்கு பாரிய மகிழ்ச்சியையும் வாழ்நாள் முழுவதுமான சந்தோசத்தையுமே கொண்டு வரும் என்பதை பெற்றோர் ஒருவராக நான் மிகவும் அறிந்திருக்கின்றேன்.

இந்தப் புதிய பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணம் முழுவதும் AIA அவர்கள் கூடவே இருக்கும் என்பதை அவர்கள் உறுதியாக நம்பலாம் என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

"தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டின் தேவை மிகவும் அர்த்தமுள்ளதாகும் சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு இலவசமான ஆயுள் காப்பீட்டை வழங்கித் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமான பெறுமதியைச் சேர்க்கும் நாட்டின் மிகச்சிறந்த மகப்பேற்று மருத்துவமனை ஒன்றுடன் கூட்டாண்மையை ஏற்படுத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

"AIAஇன் பங்கானது தனது வாழ்க்கைத் துணைக்கு ஆரோக்கியக் காப்புறுதிக் கட்டணம் செலுத்துவரின் பங்கினையே விஞ்சுகின்றது. அதனாலேயே, மிகவும் கடினமான தருணங்களில் மக்களுடன் நாங்கள் எவ்வாறு ஒருமித்திருக்கின்றோம் என்பது போலவே அவர்களது வாழ்க்கையின் மிகவும் அற்புதமான தருணங்களின் போதும் அவர்களுக்காக நாங்கள் ஒன்றாகவே இருக்க விரும்புகின்றோம்" எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

### இலங்கையின் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி

## மிகவும் மதிப்புக்குரிய நிறுவனமாக மாற்றம்

இலங்கையில் மிகவும் மதிப்புக்குரிய நிறுவனமாக 15ஆவது ஆண்டாக, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி தரப்படுத்தப்பட்டது, சமீபத்தில் வெளியான எல்எம்டி சஞ்சிகையின் மிகவும் மதிப்புக்குரிய நிறுவனங்கள் வெளியீட்டில்.

10 பண்புக்கூறு தரவரிசைகளைப் பொறுத்தவரையில், பண்புத்தர உணர்வு, மேலாண்மை விவரம், இயக்கவியல், கூட்டாண்மை கலாசாரம் மற்றும் தரிசனம் ஆகிய ஐந்து பிரிவுகளில் ஜே.கே.எச் முன்னிலை வகித்துள்ளது.

எல்.எம்.டி ஆல் நியமிக்கப்பட்ட மற்றும் கருத்தாக்கம் செய்யப்பட்ட மற்றும் நீல்சன் நடத்திய ஒரு கணக்கெடுப்பில் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளை (1,125) பெற்றதன் மூலம் ஜே.கே.எச் மிகவும் மதிப்புக்குரிய நிறுவனமாக தனது நிலையைத் தக்கவைத்துக் கொண்டது. பதிலளித்தவர்களின் கருத்துகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள "மிகவும் மதிப்புக்குரிய" நிறுவனங்களை வரிசைப்படுத்தவும், அவை ஏன் அவ்வாறு கருதப்படுகின்றன என்பதை மதிப்பீடு செய்யவும் இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிலிருந்து 800 பதிலளித்தவர்களின் (மேலாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியை இந்த ஆய்வு உள்ளடக்கியது.

# பெண் உடல் ஆரோக்கியம்



குழந்தைப் பராமரிப்பு, குடும்பப் பொறுப்பு, அலுவலகம், வீட்டுவேலை என, பெண்கள் நாம், பம்பரமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறோம். இவற்றுக்கு நடுவே, உடல்நலம் சார்ந்த எமது பிரச்னைகளைப் பெரிதாகக் கருதுவதில்லை. விளைவு, சாதாரணமாகத் தொடங்கும் உடல்நலக் கோளாறு, ஒரு கட்டத்தில் பெரிதாக உருவெடுத்துவிடுகிறது. 40 வயதுக்குள், உடல் சோர்ந்து விடுகிறது.

ஒரு நோயின் அறிகுறி ஏற்பட்ட பிறகும், நேரமின்மை அல்லது அலுவலகப் பணிச்சுமை காரணமாக, மருத்துவரிடம் செல்வதில்லை. இது, அனைத்துப் பெண்களிடமும் பரவலாகக் காணப்படும் மனநிலையாக இருக்கிறது. பெண்கள், தங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் தருவது மிகவும் அவசியம்.

பெண்கள் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு அவசியமாகக் கடைபிடிக்க வேண்டிய சிலவற்றை இங்கு பார்ப்போம்!

வேலைக்குச் செல்லும் பெண்கள் மட்டுமல்ல, வீட்டிலிருப்பவர்களும்கூட காலை உணவைத் தவிர்ப்பது வழக்கமாக இருக்கிறது. காலை உணவுதான் அன்றைய நாளின் உற்சாகத்துக்கு அடிப்படை. காலை உணவாக, ஒரு முட்டை, இரண்டு பழங்கள்/ இட்லி, சாம்பார்/ சண்ட்விச், ஜூஸ் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைச் சாப்பிடலாம்.

குறிப்பாக, பெரியளவில் உடலுழைப்பு இல்லாத பணிகளைச் செய்பவர்கள், காபோஹைத்ரேட் உணவுகளை, முடிந்தளவு குறைக்க வேண்டும். உணவில் எப்போதும் அதிகமான காய்கறிகள் இடம்பெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஹோமோன் சமச்சீரின்மைக்கு, பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இது, மாதவிடாயில் தொடங்கி மகப்பேறுவரை பல்வேறு வகையில் பெண்களைப் பாதிக்கிறது. எனவே, ஹோமோன்கள் சரியாகச் சுரக்கின்றனவா என்பதை, குறிப்பிட்டகால இடைவெளியில் சோதிப்பது நல்லது. பிரச்சினை இருந்தால், அதற்கான சிகிச்சைகளை எடுக்க வேண்டும்.

40 வயதைக் கடந்த பெண்களுக்கு, மெனோபாஸ் நின்றுவிடும் என்பதால், ஹோமோன்களின் சுரப்பு குறைந்துவிடும். இதனால், 'ஒஸ்டியோபோரோசிஸ்' (Osteoporosis) எனும் எலும்பின் அடர்த்தி குறையும் பிரச்சினை வருவதற்கான வாய்ப்பு அதிகம். இதனால், முதுகு வலி, எலும்பு முறிவு பிரச்சினைகள் ஏற்படும். இத்தகைய குறைபாடு உள்ளவர்கள், அடர் பச்சைநிறக் கீரைகளை அதிகம் உட்கொள்ள வேண்டும். எலும்பு மருத்துவரின் ஆலோசனைப்படி, விட்டமின் D மற்றும் கல்சியம் சப்ளிமென்ட்டுகளை உட்கொள்ளலாம்.

உடற்பயிற்சி, யோகா, தியானம் போன்றவை, உடல் ஆரோக்கியத்துக்கு அடிப்படை. தினமும் 30 நிமிடம் யோகா அல்லது ஏதேனும் உடற்பயிற்சி செய்வது, ஆரோக்கியமான தேகத்துக்கு வழிவகுக்கும். உடற்பயிற்சி நிபுணர்களிடம் ஆலோசித்து, வீட்டிலேயே எளிமையான பயிற்சிகளைச் செய்யலாம். உடலின் சீரான செயற்பாட்டுக்குத் தேவையான அளவு நீரை அருந்த வேண்டியது அவசியம். மனித உடல், 70 சதவிகிதம் தண்ணீரால் ஆனதே. எனவே, தினமும் போதுமான அளவு தண்ணீர் அருந்துவது, உடலை ஆரோக்கியமாகவும் புத்துணர்ச்சியாகவும் வைக்க உதவும். இதன்மூலம், டிஹைட்ரேசன் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

**“ ஒரு நாளைக்கு, குறைந்தபட்சம் 30 நிமிடம் நடைப்பயிற்சி செய்ய வேண்டும். உடலுக்குத் தேவையான விட்டமின் D, சூரிய ஒளியிலிருந்து கிடைப்பதால், காலை அல்லது மாலை நேரங்களில் சூரிய ஒளி படுமாறு நடைப்பயிற்சி செய்யலாம்**

ஒரு நாளைக்கு, குறைந்தபட்சம் 30 நிமிடம் நடைப்பயிற்சி செய்ய வேண்டும். அத்துடன், உடலுக்குத் தேவையான விட்டமின் D, சூரிய ஒளியிலிருந்து கிடைப்பதால், காலை அல்லது மாலை நேரங்களில் சூரிய ஒளி படுமாறு நடைப்பயிற்சி செய்யலாம். இது தவிர, குறைந்த தூரமுள்ள இடங்களுக்கு நடந்து செல்வது அல்லது சைக்கிளில் செல்வது எனப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளலாம்.

ஆரோக்கியமான உடலுக்கு, சராசரியாக எட்டு மணிநேரத் தூக்கம் அவசியம். அதிலும், பெண்கள் 8 முதல் 10 மணிநேரம் தவறாமல் தூங்க வேண்டும். சிறந்த உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியக் காரணி தூக்கமாகும். ஆகவே, தூக்க நேரத்தைக் குறைத்துக்கொண்டு வேலையில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.






அச்சம் தவிர் - நய்யப் புடை
மானம் போற்று - ரவுத்திரம் பழகு
ஆண்மைத் தவறேல் - தாழ்ந்து நடவேல்
சூரரைப் போற்று - தீயோர்க்கு அஞ்சேல்
ஒய்தல் ஒழி - நேர்ப்படப் பேசு
தாழ்ந்து நடவேல் - சாவதற்கு அஞ்சேல்
காலம் அழியேல் - கீழோர்க்கு அஞ்சேல்
போர்த் தொழில் பழகு - தோல்வியில் கலங்கேல்
புதியன விரும்பு - வீரியம் பெருக்கு
கெடுப்பது சோர்வு - உண்மைக்கு அஞ்சேல்
வெடிப்பறப் பேசு - நன்று கருது
வவ்வுதல் நீக்கு - தவத்தினை நிரப்பு
நீ கற்றது ஒழுகு - கைத்தொழில் போற்று
சேர்க்கை அழியேல் - பேய்களுக்கு அஞ்சேல்
ஞாயிறு போற்று - மந்திரம் வலிமை
சவுரியம் தகுமே - எல்லாம் மெய் செய்
நாள் எல்லாம் மெய் செய்

## முதல் குற்றவியல் பெண் நீதிபதி

மாலைதீவு நாட்டு வரலாற்றில் முதல் முறையாக, குற்றவியல் நீதிமன்ற நீதிபதியாக, ஒரு பெண் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுதான் இன்றைய மலேசிய ஊடகங்களில் முக்கியச் செய்தியாக உள்ளது.

17 வருட அனுபவமுள்ள முதல் பெண் துணை வக்கீல் ஜெனரலாக இருந்த தீபனாஸ் பாஹ்மி, குற்றவியல் நீதித் துறையில் நன்கு அறிந்தவர். உச்சநீதிமன்ற நீதிபதி ஹுஸ்னு அல் சூத் முன்னிலையில், தீபனாஸ் பதவியேற்றதாக நீதித்துறைச் சேவை ஆணையம் Judicial Service Commission (JSC), அறிக்கை வெளியிட்டுள்ளது.

குழந்தைகள், பெண்களின் உரிமைகளை ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஏதுவாக, மலேசிய அரசும் நீதித்துறையும் மேற்கொண்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை, அந்நாட்டின் முற்போக்காளர்களும் பெண்களும், அமைப்புகளும் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றன.



புதுவாசல் – 16

# பாலியல் இலஞ்சம்

ஸர்மிளா ஸெய்யித்
sharmilaseyyid@yahoo.com



பாலியல் இலஞ்சம் என்பது, நம் சமூகத்தில் அதிகம் நடைபெறுகின்ற ஆனால், அதிகம் பேசப்படாத ஒரு விடயம்.

தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சேவை நாடி வருவோரிடம், பாலியலை இலஞ்சமாகக் கோருவதைப் பற்றி, சமீபத்தில் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சிறீன் சரூர், தெளிவாகவும் துணிவாகவும் பேசியிருந்தார்.

இந்த நேர்காணலைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, எத்தனைப் பெண்களுக்கு இது பற்றித் தெரியும் எனத் தோன்றியது. பொதுவாக இலஞ்சம் என்றதும், நம் எண்ணத்தில் தோன்றுவது பணமோ, பொருளோ அல்லது ஒரு சேவைக்கு இன்னொரு சேவையோ தான். ஆனால், பாலுறவைக் கோருவதும் பெண்களின் உடலைச் சுரண்டுவதும்கூட இலஞ்சம் என்பதை விளங்கிக்கொள்ளாமல், பெண்கள் இதிலிருந்து தங்களைக் எப்படி காப்பாற்றிக்கொள்ள முடியும்?

தனது மேலதிகாரி, வேலை முடிந்த நேரத்தில் தன்னைச் சந்திக்க அழைப்பது, அலுவலகத்துக்கு வெளியே சந்திக்கக் கோருவதுகூட, பாலியல் இலஞ்ச வகைக்குட்பட்டது என, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சிறீன் தெரிவித்துள்ளார். இவர், இதுபற்றி 25 பெண்களுடன் நேரடியாகப் பேசி, ஓர் ஆய்வு முயற்சியைச் செய்திருக்கிறார். 15 தமிழ்ப் பெண்களிடமும் 10 முஸ்லிம் பெண்களிடமும், அவர் பேசியிருக்கிறார். இதற்கு முன்பு இது பற்றிப் பேசியறியாத அந்தப் பெண்கள், தங்களது பெயர்களையோ அடையாளத்தையோ, எந்த வகையிலும் வெளியிடக்கூடாது என்ற உறுதிமொழியுடன், தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்கள்.

இந்த அனுபவப் பகிர்வுகளில் இருந்து காணாமலாக்கப்பட்ட குடும்பப் பெண்களும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களான பெண்களும், மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதுகாப்புத் துறையினரான பொலிஸ், இராணுவமே, பாலியல் இலஞ்சம் கோருவோர் பட்டியலில் முன்னிலை வகிக்கின்றனர். கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முதற்கொண்டு அரசாங்க அதிபர் வரையும், பாலியல் இலஞ்சம் கோருவதாகவும் தேர்தலில் 25 சதவீதம் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு அமைவாக, அரசியல் கட்சிகளில் இணைவதற்குச் செல்லும் பெண்களிடம், கட்சி ஒருங்கிணைப்பாளர்களேகூட பாலியல் இலஞ்சம் கோரும் சந்தர்ப்பங்கள் இடம்பெற்று உள்ளதையும் பதிவு செய்கிறார். இவ்வளவு ஏன், பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்களில்கூட, பாலியல் இலஞ்சம் கோரப்படுகின்றது.

பெண்கள் இதனைப் பேசத் தயங்குவதற்குக் காரணம், நமது சமூக அமைப்பு. தன்னிடம் மேலதிகாரி ஒருவர் பாலியல் இலஞ்சம் கோரினார் என்று தனது கணவனிடமோ நண்பனிடமோ, உறவினர்களிடமோ முறையிட்டால், “நீ ஏன் அங்கு சென்றாய், அங்கு ஏன் வேலை செய்கின்றாய், அங்கு எப்படிப் போனாய், என்ன உடை உடுத்தியிருந்தாய், எப்படிச் சிரித்தாய்?” இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்டு, பாதிக்கப்பட்ட பெண்களையே குற்றவுணர்ச்சிக்கு உள்ளாக்கும் சமூக அமைப்புதான் நம்மிடமிருக்கிறது. பல சந்தர்ப்பங்களில், தன்னிடம் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டதை மறுத்ததாகப் பெண்கள் சொன்னால்கூட, அவளைச் சந்தேகப்படுகின்ற, தான் எதிர்பார்த்த சேவை கிடைக்கவில்லை என்றதும், வீண் பழிசுமத்துகிறாள் போன்ற குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் தான் மிஞ்சும்.

இன்னொரு முக்கியமான விடயத்தையும் நேர்காணலில் சிறீன் பகிர்ந்துகொள்கிறார். அதாவது, பாலியல் இலஞ்சம் என்பது, பெண்களுக்கு மட்டும் நேரக்கூடியது அல்ல. ஆண், பெண் இருபாலாருமே பாலியல் இலஞ்சத்துக்கு முகம் கொடுக்க நேரலாம்.

இவ்வாறு, ஆணோ பெண்ணோ பாலியல் இலஞ்சத்துக்கு முகம் கொடுக்கும்போது, நாம் அதனை முறையாகக் கையாண்டு, உரிய அதிகாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அடிப்படையில், தங்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் இத்தகைய அதிகாரிகளின் பதவிகள், இல்லாமலாக்கப்பட வேண்டும் என்றும் சிறீன் கூறுகிறார். இடமாற்றம், சரியான தீர்வாகாது என்கிறார். காரணம், இவர்கள் புதிய பணியிடத்திலும் அதே இயல்புடனேயே இருப்பார்கள். இவர்களையும் இவர்களைப் போல வேறு யாரும் பாலியல் இலஞ்சம் கோரும் செயலில் ஈடுபடாமல் செய்யவும், ஒரே வழி அவர்களைப் பெயர்கள், பதிவிகளுடன் அம்பலப்படுத்துவதும், வேறு இடங்களில்கூட பணிபுரிய முடியாது செய்வதும்தான்.

நம்மில் பலர், உரிமைகளுக்காகவும் கௌரவமான வாழ்வை நமக்கும் பிறருக்கும் உறுதி செய்வதற்காகவும்தான் இயங்குகிறோம். ஆனால், நாமேகூட பல சந்தர்ப்பங்களில் தவறிழைப்பவர்களாக அல்லது தெளிவற்றவர்களாக, அல்லது உணர்ச்சிவசப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

சமீபத்தில், ஈரோஸ் அமைப்பில் உறுப்பினராக இருந்தவர் என அறியப்படும் பிரபா என்பவரால் பாதிக்கப்பட்ட பெண்ணின் சமகால வாழ்வு நெருக்கடி குறித்து, பேஸ்புக்கில் ஒருவர் பகிர்ந்திருந்தார். பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு உதவி கோரும் பொருட்டு எழுதப்பட்ட அந்தப் பதிவில், இந்தப் பெண்ணை இந்த நிலைக்கு ஆளாக்கிய அவன் யாரென்று பலரும் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அவர், ஓர் ஈரோஸ் இயக்க உறுப்பினர் என்று, நான் பின்னூட்டம் எழுதினேன். அந்தப் பின்னூட்டத்தைத் பதிவர் நீக்கிவிட்டிருந்தார். அதாவது பாதிப்புக்குள்ளாக்கியவனின் முகத்திரையைக் கிழிப்பதை விடவும் பாதிக்கப்பட்ட பெண்ணின் நிலையைப் பேசுகின்ற அரசியலுக்கே இங்கே தேவை அதிகம் உள்ளது. இந்த அரசியல், ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பிலிருந்து உருவானது. பாதிக்கப்பட்ட பெண்ணின் பாதுகாப்பு என்ற திரையில் பாதிப்புக்குள்ளாக்கியவனையும் ஒளிப்பது. இதனால், அந்தப் பெண்ணுக்கு நிவாரணம் கிடைக்குமே தவிர, தீர்வு அமையாது. அவன், இன்னொரு பெண்ணை இன்னுமொரு ஊரில் ஏமாற்றிக்கொண்டிருப்பான். குறிப்பிட்ட நபரால் அந்தப் பெண்ணுக்கு ஆபத்து நிகழலாம் என அஞ்சினால், அவளது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணிகளைச் செய்துவிட்டு, அவனை அம்பலப்படுத்த வேண்டும். சமூகச் செயற்பாடென்று நான் நம்புவது இதுதான். பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட சமூகத் தேவைகளையும் சட்ட பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க முனைவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், குறித்த நபரை அம்பலப்படுத்துவதும் சட்டத்தின் முன் நிறுத்துவதுமாகும்.

பாதிப்புக்குள்ளாக்கிய நபர்களை, அவர்களது பெயர், பதவிகளுடன் அம்பலப்படுத்த வேண்டும் என்கிற மனித உரிமைச் செயற்பாட்டாளர் சிறீன் சரூரின் கருத்துடன் முற்றிலும் உடன்படுகின்றேன். அம்பலப்படுத்தலே இத்தகைய ஆண்களுக்கான முதல் அடி. இதனைச் செய்வதற்கு பெண்கள் அஞ்சவோ பின்வாங்கவோ கூடாது. யாராவது பெண்கள் இப்படியான சூழலுக்கு உள்ளாக்கினால், தன்னிடம் யாராவது ஓர் அதிகாரி, அரச அதிகாரியோ தனியார்த்துறை அதிகாரியோ, பாலியல் இலஞ்சம் கோரினார் என்றால், தைரியமாக அதனை சக பணியாளர்கள், நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள முன்வர வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்குத் தோழமையாக உறுதுணையாக நிற்கின்ற சூழலை வேறு யாரும் வலிந்து உருவாக்கமுடியாது. அதனை நாமேதான் உருவாக்க வேண்டும்.

அதனை எப்படி உருவாக்கப் போகிறோம்? நம் குழந்தைகளைத் தைரியமாக வளர்ப்பதன் மூலம், அவர்களுக்கு அற உணர்வை ஊட்டுவதன் மூலம்தான் சாத்தியப்படுத்த முடியும். மொத்தத்தில் ரவுத்திரம் பழகுவோம்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 8 செப்டெம்பர் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.